Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR Realtor
416.888.7877
HomeLife/GTA Realty Inc., Brokerage
www.divhomes.com

35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நிதி: 35 பாலம்: 09 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் May 01, 2025

# மக்கள் பாப்பரசர் பிரான்சிஸ்

தனது பொதுவாழ்க்கை முழுவதும் கடவுளின் கருணைக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஏழைகள்மீது மிகுந்த அக்கறை செலுத்தி, ஏனைய மதங்களுக்கு இடையேயான கலந்துரையாடல்களை நடத்திவந்தவர் 'மக்களின் பாப்பரசர்' என அழைக்கப்பட்ட பாப்பாண்டவர் பிரான்சிஸ் அவர்கள்.

பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் யேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த ஞாயிற்றுக் கிழமை மக்களை ஆசீர்வதித்துவிட்டு, ஓய்வுஎடுக்கும்போது மறுநாள் திங்கட் கிழமை 2025 ஏப்ரல் 21 அதிகாலை பக்க வாதத்தால் வந்த மாரடைப்பால் வத்திகானில் 88 வயதில் இயற்கை எய்தினார்.

1936 டிசம்பர் 17ஆம் திகதி ஆஜென்டினாவில் புளோரஸ் (Flores) நகரில் குடும்பத்தில் மூத்தவராக Jeorge Mario Bergoglio பிறந்தார். இவருடன் கூடப்பிறந்தவர்கள் நால்வர். இவரது தந்தையார் Mario Bergoglio ஒரு கணக்காளராகப் பணிபுரிந்தார். தாயார் Regina Maria Sirori வீட்டு வேலைகளைக் கவனிப்பவர். தந்தையும், தாயாருடைய குடும்பமும் இத்தாலியிலிருந்து ஆஜென்டினாவிற்குக் குடிபெயர்ந்தவர்கள்.

Jeorge Mario Bergoglio தனது பாடசாலைக் கல்வியை தான் பிறந்த இடமான Buenos Aires மாகாணத்திலேயே முடித்தபின்னர் அங்கேயே மேற்படிப்பையும் மேற்கொண்டு இரசாயனவியலில் டிப்ளோமா பட்டம் பெற்றார். அவர் 21 வயதாக இருக்கும்போது நிமோனியா நோயினால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டு அவரது நுரையீரலின் ஒரு பகுதி அகற்ற வேண்டியிருந்தது.

Jeorge Mario Bergoglio ஒரு தேவாலய பாதிரியாரின் பிரசங்கத்தால் ஈர்க்கப்பட்டு அங்குள்ள ஓர் உயர் மறைமாவட்டக்கல்விக் கூடத்தில் மூன்று ஆண்டுகளாக சமயக்கல்வி பயின்றார். அதன்பின்னர், 'ஜேசுட்' (Jesuit) எனப்படும் 'இயேசுவின் சமூகம்' (Society of Jesus) பிரிவில் சேர்ந்து சிலி நாட்டிலுள்ள சாண்டியாகோவில் மனிதநேயக்கல்வி பயின்றார். அதன்பின்னர் 1960ஆம் ஆண்டில் அதிகார பூர்வமாக ஒரு 'ஜேசுட்' ஆகி நிரந்தரமாக சமயத் தொண்டை மேற்கொண்டார். ஜேசுட் மதநிறுவன கல்லூரியான Colegio Maximo de San Joseஇல் தத்துவவியலில் (Philosophy) பட்டம் பெற்று Jorge Mario Bergoglio தத்துவியலில் பேராசிரியராக இருந்தார். பின்னர் தான் பிறந்த மாகாணமான Buenos Aires மாகாணத்தில் உள்ள ஜேசுட் பல்கலைக்கழகமான Facuitades de Filosofiz Y Teologiaஇல் இறையியல் பட்டப்படிப்பை முடித்து அங்கு இறையியல் பேராசிரியரானார்.



Pope Francis Thanks: Wikipedia

1969 டிசம்பர் 13இல் பேராயர் (Archbishop) Ramon Jose Castellano அவர்களால் பாதிரியார் (Priest)ஆக நியமிக்கப்பட்டார்.

1980ஆம் ஆண்டில் அவர் படித்த பல்கலைக்கழகத்திலேயே தத்துவம் மற்றும் இறையியல் பீடத்தின் தலைவராக நியமிக்கப்பட்டு 1986ஆம் ஆண்டுவரை அப்பதவி வகித்தார். பின்னர் 1992ஆம் ஆண்டில் துணை பிஷப்பாகவும், அதைத் தொடர்ந்து 1997ஆம் ஆண்டில் Buenos Aires மாகாணத்தின் இணைப் பேராயராகவும் (Coadjutor Archbishop) நியமிக்கப்பட்டார். மாகாணத்தின் பேராயரின் மறைவிற்குப் பின்னர் Jeorge Bergoglio 1993ஆம் ஆண்டின் பேராயரானார் (Archbishop).

அவர் பேராயராக இருக்கும்போது புதிய திருச்சபைகளை (Parishes) நிறுவினார். பேராயத்தையும் (Archdiocese) மறுசீரமைத்தார். வாழ்க்கைக்கு ஆதரவான (Pro-life) முயற்சிகளை வழிநடத்தினார். மற்றும் விவாகரத்துகள் குறித்து ஆராய ஓர் ஆணையத்தை அமைத்தார்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

# கனடாவின் பிரதமர் மார்க் காணி



Prime Minister Mark Carney delivering his victory speech

2025 ஏப்ரல் 28ஆம் திகதி நடைபெற்ற கனடாவின் 45ஆவது நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் அதிகப்படியான ஆசனங்களை வென்று லிபரல் கட்சி மீண்டும் நான்காவது முறையாகத் தொடர்ந்து ஆட்சியமைக்கிறது. லிபரல் கட்சியின் தலைவர் மார்க் காணி முதல் முறையாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டதுடன் கனடாவின் 24ஆவது பிரதமராகப் பதவியேற்கவுள்ளார்.

தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 2025 ஏப்ரல் 28ஆம் திகதி நள்ளிரவைத் தாண்டியும் எண்ணி முடிவுறாததால் அவை எண்ணுவது நிறுத்தப்பட்டு மறுநாள் காலை 9:30மணிக்கு மீதி வாக்குகள் எண்ணுவது ஆரம்பமானது.

இதுவரை வெளிவந்த தேர்தல் முடிவுகளின்படி பின்வரும் இடங்களில் கட்சிகள் வெற்றி பெற்றுள்ளது அல்லது முன்னணியில் உள்ளன.

| | |
|---|---|
| லிபரல் கட்சி | 169 |
| பழமைவாதக் கட்சி | 144 |
| புளக்குவிபெக்குவா கட்சி | 22 |
| புதிய ஜனநாயகக் கட்சி | 07 |
| பசுமைக் கட்சி | 01 |
| மொத்தம் | 343 |

அறுதிப் பெரும்பான்மையைப் பெற 172 ஆசனங்களைப் பெறவேண்டிய நிலையில் லிபரல் கட்சி 169 ஆசனங்களைப் பெற்று 3 ஆசனங்கள் குறைவாக இருக்கிறது.

மூன்று தொகுதிகளில் வாக்குகள் வித்தியாசம் சில நூறுகளாக இருப்பதாலும் அத்தொகுதிகளில் இன்னும் ஆயிரக் கணக்கான வாக்குகள் எண்ணி முடியாமல் இருப்பதாலும் ஊடகங்களால் லிபரல் கட்சிதான் ஆட்சி அமைக்கும் என்று கூறினாலும் லிபரல் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறுமா அல்லது சிறுபான்மை அரசை அமைக்குமா என எதிர்வு கூறமுடியாமல் இருக்கின்றன.

பழமைவாதக் கட்சியின் தலைவர் Pierre Polievre தான் போட்டியிட்ட Carleton தொகுதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுத் தோல்வியடைந்துள்ளார். இவர் கடந்த 20 ஆண்டுகளாக இத்தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் Jagmeet Singh தான் போட்டியிட்ட Bornaby Central தொகுதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுத் தோல்வியடைந்துள்ளார். அத்துடன் அவர் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாகவும் தெரிவித்திருந்தார்.

Scaborough - Guilwood - Rough Park தொகுதியில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஹரி ஆனந்தசங்கரி 99% ஆன வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில் 34,941 வாக்குகள் பெற்று 17,558 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டியுள்ளார்.

Pickering - Brooklin தொகுதியில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட யுவனிற்றா நாதன் 99%ஆன வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில் 37,896

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan CLU,CHS
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436
Real Estate Insurance

My services are 100% FREE
For First Time Buyers/Buyers/Tenants
வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
www.tisipara.com
Call Para
647.296.0596.

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc. Brokerage
5215 Finch Ave.E. #203, Toronto ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963
*Independently Owned & Operated
TRUTH BUILDS TRUST

# House for Sale / Lease / Condo / BSMT

## House for Sale
Detached House
3BR + 1BR BSMT
Asking $899 K
Separate Entrance

Morningside | Sewells

George Paranthaman**
Call : 416 277 9044

## Condo for Sale
2 BR. + DEN
2 Washroom
Spacious Balcony
UG Parking
Walk to Go Station

3 Years Old Pickering
Asking $649,900
Vishal Sarda*
Call : 416 629 1973

## Condo For Sale
Downtown Toronto
Condo for Sale

300 Front Street
2BR + 2WR Parking
$935,000
Deepak Dani **
Call : 416 930 9733

## Office Unit for Sale
GTA Square
Finch Avenue /
Middlefield
Main Floor Unit
Busy Mall
Under ground Parking
$279k
Matt Nadarajah*
Call : 416 960 6130

## Condo for Rent
2BR / 2WR
805 SF

Pickering $2550

Casey Woo *
Call : 647 801 6770

## Condo For Rent
2BR + 2WR + Parking

Kennedy / HWY 401

Tridel Building
Gulshan Sharma**
Call : 416 407 5911

## House for Sale
Detached Scarboro
4 BR + 2BR
7 Wash Rooms
Custom Build Basement
Finched Washroom
Kitchen
Walk - up
(Kennedy / Sheppard)
Rajiv Agnihotri *
Call : 416 930 0684

To Join
HomeLife/GTA
Realty Inc.
Call at :
416 321 6969
Email:
gtarealty@gmail.com
One of the Best
Brokerage in East Toronto.

## House for Sale
Detached 2 Storey
4BR + 1 BR
5 WR
Over 2000 SF

Markham
(14th AVE / 9th Line)
Amal Joseph *
Call : 416 300 8294

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
Tel: 416-321-6969

* Sales Rep.
** Broker

* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# என்பிபி அரசின் மீதான கருத்துக்கணிப்பு

## – அரவின் –

இலங்கையில் மே 6ஆம் திகதி, மொத்தம் 339 உள்ளூராட்சி சபைகளுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

2023ஆம் ஆண்டு இந்தத் தேர்தலை நடத்துவதற்கு தொடங்கப்பட்ட முயற்சிகள், இப்பொழுதுதான் கைகூடி வந்திருக்கிறது. இத்தேர்தலை நடத்துவதில் தேர்தல்கள் ஆணைக்குழு பெரும் சிரமங்களையும் சிக்கல்களையும் கடந்து வரவேண்டியிருந்தது.

இந்தத் தேர்தல் முக்கியத்துவத்துடன் பார்க்கப்படுவதற்கு முதலாவது காரணம், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஒரு கருத்துக் கணிப்பாக கருதப்படுவதுதான்.

தேசிய மக்கள் சக்தி, ஜனாதிபதி பதவியை கைப்பற்றி ஏழு மாதங்களும், நாடாளுமன்றத்தைக் கைப்பற்றி ஐந்து மாதங்களும் ஆகிவிட்ட நிலையில், இக் காலகட்டத்தில் அரசாங்கம் சென்ற பாதை சரியானதா, அதுபற்றிய மக்களின் எண்ணம் என்ன என்பதை இந்தத் தேர்தல் வெளிப்படுத்தும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

பொதுவாக உள்ளூராட்சித் தேர்தல் என்பது, கட்சி அரசியலை தாண்டி, கிராம மட்டங்களில் செல்வாக்கு செலுத்தக் கூடிய வேட்பாளர்களுக்கே சாதகமானது.

அவர்கள் பெற்றுக்கொள்ளும் வாக்குகளை கட்சிகள் தமக்கான அங்கீகாரமாக பிரகடனப்படுத்திக் கொள்ளும். ஆனால், உள்ளூராட்சித் தேர்தல் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கான அங்கீகாரமாக அமையுமா என்பது முக்கியமான கேள்வியாக இருக்கிறது.

விளம்பரம்
VLAMBARAM

35ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

தேர்தலுக்கு இரண்டு வாரங்கள் முன்னதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளில் ஒன்றான பவ்ரலின், நிறைவேற்று பணிப்பாளர் றோகண ஹெற்றியாராச்சி ஒரு தகவலை வெளியிட்டிருந்தார்.

இந்தத் தேர்தலில் அரசாங்க வளங்கள் மற்றும் அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக 30இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக அவர் கூறியிருக்கிறார்.

வடக்கில் தேர்தல் விதிமுறைகளை மீறுகின்ற செயற்பாடுகள் மிகமிக அதிகளவில் இடம்பெறுகின்றன. ஆளும் கட்சியினரே விதிமுறைகளை அதிகளவில் மீறுகின்றனர்.

அதிகாரத்தையும் அரசாங்க வளங்களையும் பயன்படுத்துகின்ற போக்கு, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலும் மாறவில்லை.

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன போன்ற கட்சிகளிடம் இருந்து, தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் வேறுபட்ட ஒன்றாக இல்லை.

மக்கள் மாற்றத்திற்காக வாக்களித்திருப்பதாகக் கூறிய தேசிய மக்கள் சக்தி, மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டது என்பதை, இந்தத் தேர்தல் விதிமுறை மீறல்களில் இருந்தே உணர்ந்து கொள்ளலாம்.

ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய போன்றோர் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டபோதும் சரி, ஏனைய இடங்களுக்கு மேற்கொள்ளுகின்ற பயணங்களின் போதும் சரி, தேர்தல் விதிமுறைகளைப் பின்பற்றவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

இந்தத் தேர்தலில் எப்படியாவது வென்று விட வேண்டும் என்ற தீர்மானத்தில், தேசிய மக்கள் சக்தி இருக்கிறது. ஏனென்றால் ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வெற்றியைவிட, பொதுத் தேர்தலில் அந்தக் கட்சிக்கு மிகப்பெரிய வெற்றி கிடைத்தது.

இந்த வெற்றிகள் கிடைத்து 5 மாதங்களுக்குப் பின்னர், நடக்கின்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சரிவைச் சந்திக்குமேயானால், இந்த ஆட்சியின் மீது மக்கள் அதிருப்தி அடையத் தொடங்கிவிட்டனர், மக்கள் வெறுப்படைந்து இருக்கின்றனர் என்ற கருத்து ஏற்பட்டு விடும். குறுகிய காலத்தில் அப்படி ஒரு பெயர் அரசாங்கத்திற்கு ஏற்படுமேயானால், நீண்டகாலம் எதிர்க்கட்சிகளின் கடுமையான விமர்சனங்களுடன் கழிக்க நேரிடும். அதனால் இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு பெரியதொரு வெற்றி முக்கியமானது.

அனுரகுமார திசநாயக்கவும் ஹரிணி அமரசூரியவும்தான் இந்த அரசாங்கத்தின் முக்கியமான பிரபலங்கள்.

அவர்கள் இந்தத் தேர்தலுக்காக மாவட்டம் மாவட்டமாகச் சென்று பிரச்சாரங்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஆனால், அவர்கள் அதனை தேர்தல் பிரச்சாரமாகக் காட்டிக்கொள்ளவில்லை, மக்கள் சந்திப்பு என்ற பெயரிலேயே எல்லாப் பிரச்சாரக் கூட்டங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன.




முன்னதாக ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க பிரச்சாரங்களில் ஈடுபட மாட்டார் எனக் கூறப்பட்டது. ஆனால் நிலைமையின் தீவிரத்தைக் கருதி, அவர் நேரடியாகவே ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகிறார். இது அரசாங்கத்துக்கு உள்ள நெருக்கடியை தெளிவாகக் காட்டுகிறது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், வாக்காளர்களுக்குக் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமலேயே மீண்டும் மூன்றாவது முறை வாக்குக் கேட்கச் சென்றிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. பொதுத்தேர்தலில் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. இப்பொழுது மீண்டும் உள்ளூராட்சித் தேர்தலிலும் அதே வாக்குறுதிகள் கொடுக்கப்படுகின்றன.

கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அரசாங்கத்தை நடத்துவதில், தேசிய மக்கள் சக்தி பெரிய வெற்றியைக் காண்பிக்கவில்லை. அது அந்தக் கட்சிக்கு உள்ள மிகப்பெரிய பலவீனமாக உள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை, புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படவில்லை, இராணுவம் வசமுள்ள காணிகள் ஒப்படைக்கப்பட வில்லை, காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய எந்த நடவடிக்கைகளும் தொடங்கப்படவில்லை, அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை, பொருளாதார ரீதியான முன்னேற்றங்கள் காணப்படவில்லை, மின்சாரக் கட்டணம் குறைக்கப்படவில்லை, எரிபொருள் கட்டணங்கள் குறைக்கப்படவில்லை, விலைவாசி குறையவில்லை.

இப்படியே கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் எல்லாமே நிலுவையில்தான் இருக்கின்றன. இந்தச் சூழலில் அரசாங்கம் தேர்தலை சந்திக்கின்றபொழுது எதிர்பார்க்கின்ற பலனை அடைய முடியாது என்பது தேசிய மக்கள் சக்திக்குத் தெரியும்.

அதைவிட, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு நீதியைப் பெற்று தருவதாக அரசாங்கம் கூறியது.

அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும், ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னதாக, முக்கியமான குற்றவாளி வெளிப்படுத்தப்படுவார் என்றும் ஜனாதிபதியினால் வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆனால் கடந்த 21ஆம் திகதி அந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை.

அதற்கு முதல் நாள், ஜனாதிபதி விசாரணைக் குழுவின் அறிக்கையை குற்றப்புலனாய்வுத் துறையிடம், கொடுத்து நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருக்கிறார் ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க.

66,000 பக்கங்களைக்கொண்ட அந்த அறிக்கையை ஆராய்வதற்கு, உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கின்றனர்.

அவர்கள் ஐவரும் முக்கியமான பொறுப்புகளில் இருப்போர். பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வு பிரிவுத் தலைவர், குற்றப் புலனாய்வு பிரிவின் பணிப்பாளர், பயங்கரவாத விசாரணை பிரிவின் தலைவர் என உயர் பொறுப்புகளில் அவர்கள் இருக்கின்றனர்.

இந்த 66,000 பக்கங்களையும் படித்துப் பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு நீண்ட காலம் செல்லும். அதற்காக 5 துணைக் குழுக்களும் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.

அதேவேளை இந்தக் குழுவில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவும் சேர்க்கப்பட்டிருக்கிறார். ஷானி அபேசேகர முன்னர் விசாரணைகளை முன்னெடுத்து பின்னர் பதவியில் இருந்து நீக்கப்பட்டவர்.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின், அவர் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டு இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்.

அவர் அந்த விசாரணை தொடர்பான, ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமும் அளித்திருந்தார். அப்படி இருக்கின்ற ஒருவரை அறிக்கையை ஆராயும் பொறுப்பில் நியமித்திருப்பதும் கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தி இருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அவசர அவசரமாக உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக எடுக்கின்ற பல நடவடிக்கைகள் நெறிமுறைகளுக்கு அப்பாற்பட்டவையாக இருக்கின்றன.

இது அரசாங்கத்தின் பலவீனத்தைக் காட்டுகிறது. அரசாங்கம் எதையாவது செய்ய வேண்டும் என்று நினைக்கிறதே தவிர, சரியான முறையில் அதனைச் செய்யவேண்டும் என்பதை மறந்து விட்டது. இது அரசாங்கத்தை எங்கு கொண்டுபோய் நிறுத்துமோ தெரியவில்லை?

Vlambaram - May 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-05-01 6:24 PM Page 5



# மக்கள் பாப்பரசர்....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

Jeorge Bergoglio பேராயராக இருக்கும் போது செய்த முயற்சிகளில் முக்கியமாக கருதப்படுவது ஏழைகள் வாழும் சேரிப் பகுதிகளுக்குச் சென்று பணிபுரிந்தது ஆகும். அவர் காலத்தில் இவ்வாறான சேரிப்பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்குப் பணிபுரிய நியமித்த பாதிரிமார்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காகியது. இப்பாதிரிமார்களின் பணிகளை Jeorge Bergoglio நேரில் சென்று மேற்பார்வை செய்தார். இதனால் இவரை சேரி பிஷப் (Slum Bishop) எனவும் அழைக்கப்பட்டார்.



Thanks: Instagram.com/Franciscus

2001இல் அப்போதைய பாப்பாண்டவர் ஜோன் போல் IIஇனால் Jeorge Bergoglio கார்டினல் (Cardinal)ஆக நியமிக்கப்பட்டார். 2013 பெப்ரவரி 18இல் அப்போது இருந்த பாப்பாண்டவர் பெனடிக் XVI பாப்பரசர் பதவியில் இருந்து விலகியதைத் தொடர்ந்து நடைபெற்ற இரகசியக் கூட்டத்தில் (Conclave) கார்டினல் எல்லோரும் Jeorge Bergoglioஐ அடுத்த பாப்பாண்டவராகத் தேர்ந்தெடுத்தனர்.

Assisiஐச் சேர்ந்த புனித பிரான்சிஸ் (Saint Francis)இனுடைய நினைவாக தனது பாப்பாண்டவருக்கான பெயராக பிரான்சிஸ்ஐ தேர்வுசெய்து Jeorge Bergoglio 2013 மார்ச் மாதம் 13ஆம் திகதி பாப்பாண்டவரானார்.

பாப்பாண்டவராகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜேசுட் ஆக பாப்பாண்டவர் பிரான்சிஸ் இருக்கிறார். இவரே அமெரிக்கக் கண்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முதலாவது பாப்பாண்டவருமாவார்.

பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்ட பிரான்சிஸ்தான் ஐரோப்பாக் கண்டத்திற்கு வெளியில் இருந்து 8ஆம் நூற்றாண்டில் தெரிவு செய்யப்பட்ட சிரிய நாட்டவரான பாப்பாண்டவர் Gregory IIIஇற்குப் பின்னர் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பாப்பாண்டவர் ஆவார்.

இவர் தனக்கு முந்தைய பாப்பரசர்களை விட மிகவும் எளிமையாக ஆடம்பரமற்ற வாழ்க்கையை வாழ்ந்தார். முந்தைய பாப்பரசர்கள் பயன்படுத்திய Apostolic அரண்மனையின் மாடிக் குடியிருப்புகளில் வாழாமல், விருந்தினர் மாளிகையில் மற்றவர்களுடன் வாழ்ந்தார். இதேபோல் இவர் மற்றைய பாப்பரசர்களைவிடப் பதவி குறைவான அணுகுமுறைகளையே தனது வாழ்நாளில் கடைப்பிடித்தார்.

பாப்பாண்டவர் பிரான்சிஸ் அவர்கள் ஜேசுட் நடைமுறைகளான எளிமையையும், ஆடம்பரமற்ற செயல்களையும் கடைப் பிடித்தார். பாப்பரசர்கள் அணியும் மீன் மோதிரம் தங்கத்தினால் ஆனது. ஆனால், தனது மீன் மோதிரத்திற்கு வெள்ளியையே தேர்ந்தெடுத்தார். இம்மோதிரம் முற்காலத் தில் பாப்பாண்டவர்கள் கையெழுத்து இடும்போது முத்திரை குத்துவதற்குப் பாவிக்கும் பாப்பாண்டவர்களின் பெயர் பொறிக்கப்பட்டுள்ள மோதிரம். இது பாப்பாண்டவர் இறந்தவுடன் அவரது கையெழுத்தை மற்றவர்கள் போடாமல் இருப்பதற்காக உடைத்து நொறுக்கப்படும்.

பாப்பாண்டவர் பிரான்சிஸ் தான் கார்டினல் ஆக இருக்கும்போது மார்பில்



Pope Francis and Mary Simon, governor general of Canada
Thanks: CNS photo/Paul Haring

அணிந்திருந்த அதே சிலுவையையே பாப்பாண்டவராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னரும் அணிந்திருந்தார். கத்தோலிக்க திருச்சபை நிகழ்வுகளை மேற்பார்வை செய்யும் சபையான 'Roman Curia' இற்கு பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் முதல் முறையாக பெண்களை முழு உறுப்பினர் களாக்கினார். கத்தோலிக்க திருச்சபை LGBTQ மக்களைச் சேர்ந்து இயங்க வேண்டும் என பாப்பரசர் பிரான்சிஸ் நம்பினார். ஒரே பாலின திருமணங்களை ஆதரிக்காவிட்டாலும், ஒரே பாலின உறவில் உள்ளவர்களுக்கு தனிப்பட்ட முறையில் கத்தோலிக்க பாதிரிமார் ஆசீர்வாதம் வழங்கலாம் என்ற முறையை பாப்பாண்டவர் பிரான்சிஸ் நடைமுறைப்படுத்தினார்.



Thanks: America, The Jesuit Review

எந்தச் சந்தர்ப்பத்திலும் மரண தண்டனையை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கருதிய பாப்பாண்டவர் பிரான்சிஸ் அவர்கள் மரண தண்டனையை உலகளாவியரீதியில் ஒழிப்பதற்குக் கத்தோலிக்க திருச்சபை ஈடுபடும் என உறுதியளித் திருந்தார். அத்துடன் ஓரினச் சேர்க்கையை நாடுகள் ஒரு தண்டனைக் குரிய குற்றமாகக் கருதக்கூடாது எனவும் வலியுறுத்தினார்.

பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் அமெரிக் காவிற்கும், கியூபாவிற்கும் இடையே முழு இராஜதந்திர உறவுகளை மீட்டெடுக்க உதவினார். சீன ஆயர்களை நியமிப்பதில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கை வரையறுக்க சீனாவின் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் ஒப்பந்தத்தைச் செய்தார்.

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனியர்களுக்கும் இடையே அமைதியை ஊக்குவித்த பாப்பாண்டவர் பிரான்சிஸ், பாலஸ்தீன அரசுடன் வத்திகானின் முதல் ஒப்பந்தத் திலும் கையெழுத்திட்டார். காசாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளைக் கண்டித்து போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

புலம்பெயர்ந்தோரை பாதுகாப்பதை "நாகரிகத்தின் கடமை" என்று கூறிய பாப்பரசர் பிரான்சிஸ், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உட்பட குடியேற்றவாதிகளை எதிர்க்கும் அரசுகளின் அரசியலை விமர்சித்தார்.

2022ஆம் ஆண்டு கனடாவிற்கு வந்த பாப்பாண்டவர் பிரான்சிஸ் குடியிருப்பு பள்ளிக்கூடங்களில் கனேடியப் பழங்குடி மக்களின் கலாசார இனப்படுகொலையில் கத்தோலிக்க திருச்சபையின் பங்கிற்கு அவர்களிடம் மன்னிப்புக் கோரினார்.



Pope Francis visits Canada to apologize to Indigenous peoples for abuses
Thanks: PBS News

பாப்பரசர் பிரான்சிஸ் முக்கிய நிகழ்வாக கருதப்படுவது, பாப்பரசரால் கூட்டப்படும் கத்தோலிக்க பிஷப்மாரின் 'Synod on Synodality' எனப்படும் கூட்டத்தில் உலகில் உள்ள அனைத்து கத்தோலிக்க மதத்தவர்களின் பிரதிநிதிகளின் கருத்துகளை கேட்டதுடன் அதில் முதல் தடவையாக பெண்கள் கொள்கைகள் தெரிவில் வாக்களித்தமையுமாகும்.

அத்துடன் இந்நிகழ்வில் பாப்பாண்டவர் பிரான்சிஸ் காலநிலை மாற்றத்திற்கு மேற்கத்திய வாழ்க்கை முறை காரணமாக இருப்பதாக குற்றம் சுமத்தினார். காபன் வாயுக்களின் வெளியீடு சீனாவைவிட அமெரிக்காவில் இரண்டு மடங்காக இருப்பதாகக் கூறினார். இது நாடு முழுவதும் வெளியிடும் காபன் வாயுக் களை அவர்களது சனத்தொகையால் பிரித்தால் தனிநபர் ஒருவர் வெளியிடும் காபன் வாயுக்களின் அளவைக் குறிக்கும்.

அமெரிக்காவின் இந்த காபன் வாயுக் களின் வெளியீடு சராசரி ஏழை நாடு களின் தனி ஒருவர் வெளியிடுவதை விட ஏழு மடங்காக இருக்கிறது என்றும் கூறினார்.

இவ்வாறு தனது பொது வாழ்வு முழுவதும் ஏழை எளியவர்களுக்காகவும் எளிமையாக வும் வாழ்ந்து மறைந்த பாப்பரசர் பிரான்சிஸ்சினுடைய இழப்பிற்கு உலகம் முழுவதும் வாழும் கத்தோலிக்க மக்கள் மட்டுமல்லாமல், எல்லா மத, இன மக்களும் தமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றனர்.



Clergy and large crowds attended the funeral mass
Thanks: BBC

பாப்பாண்டவர் பிரான்சினுடைய இறுதி நிகழ்வு 2025 ஏப்ரல் 26இல் வத்திகானில் நடைபெற்றது. உலகில் உள்ள 50இற்கும் மேற்பட்ட நாடுகளின் அரச தலைவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். 250,000 மேற்பட்ட மக்கள் பாப்பாண்ட வரிற்கு இறுதி நிகழ்வின் முன்னர் தமது இறுதி அஞ்சலியை செலுத்தியிருந்தனர்.

பாப்பாண்டவர் பிரான்சிஸ் அவர்கள் தனது இறுதி நிகழ்விலும் பல எளிய நடைமுறைகளை வழமைக்கு மாறாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கேட்டிருந்தார்.



Procession of the body of Pope Francis
Thanks: Wikipedia

சைப்ரஸ் (Cypress), ஈயம் (Lead) மற்றும் தேக்கு (Teak) ஆகியவற்றால் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட மூன்று பெட்டிகளில் (Caskets) பல நூற்றாண்டு காலமாக பாப்பாண்டவர் அடக்கம் செய்யப்பட்டு வந்தனர். ஆனால், பாப்பரசர் பிரான்சிஸ் தன்னை துத்த நாகத்தால் (Zinc) உள்பக்கம் கொண்ட மரப்பெட்டியில் அடக்கம் செய்யுமாறு கேட்டிருந்தார். அவ்வாறே அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.



St. Peter's Basilica - The crowd attending the funeral ceremony.
Thanks: Alberto Pizzoli/AFP/Getty Images

நூற்றாண்டுகளாக பாப்பாண்டவர்கள் St.Peter's பசிலிக்காவில் அடக்கம் செய்யப்பட்டனர். ஆனால், பாப்பாண்டவர் பிரான்சிஸ் தன்னை St. Peter'sஇல் இருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள St. Mary Major பசிலிக்கா வையே தனது இறுதி ஓய்வு இடமாக அவர் விரும்பினார். அவ்வாறே அவரது உடலும் St. Peter'sஇல் இருந்து ஊர்வல மாக 150,000 மேற்பட்ட மக்கள் வரிசை யாக நின்று கைதட்டி "பாப்பா பிரான்செஸ்கோ" (Papa Francesco) என ஆரவாரம் செய்ய St. Mary Major இற்கு எடுத்து செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

Vlambaram - May 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-05-01 6:24 PM Page 6



# பிள்ளையானும் என்பிபியின் வாக்கு அரசியலும்

## – முகிலன் –

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து, தடுப்புக்காவலில் வைத்துள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் அவரை 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

பிள்ளையான் கைது செய்யப்பட்ட சில நாட்களில் பின்னர், அமைச்சரவைப் பேச்சாளரான நளிந்த ஜெகதிஸ்ஸ ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான பல இரகசியங்களை வெளியிட்டிருக்கிறார் என்று கூறியிருந்தார்.

அதற்குப்பின்னர் பிள்ளையானைச் சந்திப் பதற்கு, முன்னாள் அமைச்சரான, உதய கம்மன்பில குற்றப்புலனாய்வு பிரிவிடம் அனுமதி கோரியிருந்தார். பிள்ளையானின் சட்ட ஆலோசகராகச் செயற்பட விருப்பதாக கூறியே அவர் அனுமதி கோரினார். அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

அரை மணி நேரம் பிள்ளையானைச் சந்தித்து உரையாடிய உதய கம்மன்பில, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக எந்தத் தகவலையும் பிள்ளையான் வெளியிடவில்லை என்றும், அவர் கைது செய்யப்பட்டிருப்பது கிழக்குப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் ரவீந்திர நாத் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே என்றும் கூறியிருக்கிறார்.

மொத்தத்தில் பிள்ளையான் கைது, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல், ரவீந்திரநாத் கடத்தல் என பரபரப்பாக செய்திகள் வெளியிடப் பட்டாலும், இதற்குப் பின்னால் அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் ஒளிந்திருப்பதைப் புரிந்து கொள்வது கடினம் அல்ல.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில், பிள்ளையான் ஏற்கனவே 5 ஆண்டுகள் சிறையில் இருந்தவர்.

அவர் மீண்டும் சிறைக்கு சென்றிருக்கிறார் என்றால், அவரது கடந்தகால கறை படிந்த வரலாறே அதற்குக் காரணம்.

படுகொலைகள், ஆட்கடத்தல்கள், கப்பம் கோருதல் என ஏராளமான குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர் பிள்ளையான்.

அதுமாத்திரமன்றி, தமிழரின் ஆயுத வழிப் போராட்டத்தைப் புறக்கணிப்பதற்கு, இலங்கை அரசாங்கத்திற்குத் துணை நின்றவர் அவர்.

பல குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்டிருந் தாலும், ஆட்சியிலிருந்த அரசாங்கங்களின் துணை இருந்ததாலும், இராணுவ புலனாய்வு பிரிவின் தயவு இருந்ததாலும், அவரால் தப்பிக்க முடிந்தது.



ஆனால், நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அவருக்குச் சார்பாக காற்று வீசவில்லை. அதுபோல இப்போதும் நிலைமை அப்படி இல்லை. இதனால் அவர் கம்பி எண்ணுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் ரவீந்திரநாத் கடத்தல் விவகாரத்திலோ, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விவகாரத் திலோ, பிள்ளையானுக்கு தொடர்பு இருக்கிறதா இல்லையா என்பதை நீதிமன்றம்தான் உறுதி செய்ய வேண்டும். அவ்வாறான தொடர்பு இருக்கிறது என்ற அடிப்படையிலேயே, இப்போது விசாரணை கள் இடம்பெறுகின்றன, குற்றச்சாட்டுக்கள் கூறப்படுகின்றன.

அவர்மீது கூறப்படுகின்ற இந்தக் குற்றச் சாட்டுக்கள் உண்மையாகவும் இருக்கலாம் பொய்யாகவும் இருக்கலாம். ஆனால் அவர் கடந்த காலங்களில் இழைத்த தவறுகள் பலவற்றின் விளைவாக, இன்று சிறைக்குள் தள்ளப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது.

செய்த தவறுகளுக்காக தண்டனையில் இருந்து தப்பித்தவர்கள், செய்யாத தவறுக்காக சிறை சென்றதை வரலாற்றில் அடையாளப்படுத்த முடியும்.

பிள்ளையான் இப்போது செய்த தவறுக்காக சிறைக்கு சென்றிருக்கிறாரா அல்லது கடந்த காலத்தில் செய்த தவறுகளின் விளைவாக சென்றிருக்கிறாரா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஆனால் இந்த விவகாரத்துக்கு பின்னால் இருக்கும் அரசியல் ஒன்று மறைக்கப்படுகிறது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பது என்பது, முக்கிய மான அரசியல் வாக்குறுதியாக உள்ளது. ஒவ்வொரு தேர்தல்களிலும் நீதி பெற்றுக் கொடுக்கப்படும் எனக் கூறப்படுகிறது. இப்போதும் அப்படித்தான்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு யாராவது ஒருவர் தேவைப்பட்டார். அது பிள்ளையானாக அமைந்து போனதுதான் அவரது துரதிஷ்டம்.

ஆனால், கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் ரவீந்திரநாத் கடத்தல் விவகாரத்திலேயே பிள்ளையானை குற்றப் புலனாய்வுப் பிரிவு கைது செய்திருக்கிறது. இப்பொழுது, பல குற்றங்கள் தொடர்பான தகவல்களை அவர் வெளியிட்டு இருக்கிறார் என்றும், தண்டனையிலிருந்து அவர் தப்பிக்க முடியாது என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியிருக்கிறார்.

ஆக, பிள்ளையானை சிறைக்குள் தள்ளுவது என தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது. இதன்மூலமாக தேசிய மக்கள் சக்தி அடைய நினைக்கின்ற இலக்கு என்ன? அதுதான் முக்கியமான விடயம்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னதாக, கருணா, பிள்ளையான் ஆகியோரை இணைத்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கிழக்கு தமிழர் கூட்டமைப்பு என்ற ஓர் அரசியல் அணியை உருவாக்கி இருந்தார்.

அக்கூட்டணி அமைக்கப்பட்ட கையுடன், வியாழேந்திரன் கைது செய்யப்பட்டார். கருணாவுக்கு எதிராக பிரித்தானியாவில் தடை விதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிள்ளையான் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கிழக்கு தமிழர் கூட்டமைப்பு உருவான தால்தான், இவர்கள் கைது செய்யப் பட்டனர் என்றொரு கருத்து முன்வைக்கப் படுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல. அது காகம் இருக்க பனம்பழம் விழுந்தது போல அமைந்து விட்டது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இந்த விடயத்தில் பல காய்களை ஒரே நேரத்தில் வீழ்த்துவதற்கு முயற்சிக்கிறது.

கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு 21 தேர்தல் மாவட்டங்களில் வெற்றி கிடைத்தது நினைவிருக்கலாம். மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் அதனால் வெற்றிபெற முடியவில்லை.

இலங்கையின் வரலாற்றில் அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் வெற்றிபெற்ற ஒரே அரசியல் கட்சி என்ற சாதனையை படைக்கும் வாய்ப்பை, தேசிய மக்கள் சக்தி இதனால் இழந்தது.

அந்தக் கட்சி பொதுத்தேர்தலில் தாம் அடைந்த இந்தப் பின்னடைவை, உள்ளூராட்சித் தேர்தலில் சரி செய்ய முயற்சிக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தலில் எப்படியாவது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உள்ளூ ராட்சி சபைகளைக் கைப்பற்றிவிட வேண்டும் என்று அது திடமான முடிவில் இருக்கிறது. பொதுத் தேர்தலில், மட்டக்களப்பு மாவட்டம் தேசிய மக்கள் சக்தியிடம் சிக்காமல் போனதற்குக் காரணம், அங்கு தமிழரசுக் கட்சி பெற்றுக்கொண்ட வாக்குகள்.

தமிழரசுக் கட்சிக்கு அங்கு 96,975 வாக்குகள் (33.78%) கிடைத்திருந்தன. அதன்மூலம் அந்தக் கட்சி மட்டக்களப்பில் மூன்று ஆசனங்களைக் கைப்பற்றி இருந்தது.

இப்பொழுது வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி தேசிய மக்கள் சக்தி, தமிழ் தேசிய அரசியல் கட்சிகளையே குறிவைத்து செயற்படுகின்றது. தமிழ் மக்களிடமிருந்து அவற்றைப் பிளவுபடுத்தி, வாக்குகளைப் பிரித்தெடுப் பதற்கு முயற்சிக்கிறது. அதன்மூலமாக பல இலக்குகளை அந்தக் கட்சியால் அடைய முடியும்.

தமிழருக்கு இனப்பிரச்சினை என எதுவும் கிடையாது என அடையாளப்படுத்த முடியும்.

தமிழர் சிங்களத் தலைமையை ஏற்றுக் கொண்டு விட்டனர் என்று நிரூபிக்க முடியும்.

தமிழருக்கு தனியான தாயகம் கிடையாது என்பதை தமிழரே ஒப்புக்கொண்டு விட்டனர் என்று உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

தமிழருக்குத் தீர்வு எதையுமே வழங்காமல், தமிழரின் நிலங்களையும் உரிமைகளையும் மத்திய அரசின்கீழ் கொண்டு வருவதற்கு, இதைவிட வேறு வாய்ப்பு கிடைக்காது.

இவ்வாறான பல இலக்குகளை நோக்காக கொண்டு தமிழ்க் கட்சிகளைப் பலவீனப் படுத்தி, அடியோடு இல்லாமல் செய்கின்ற முயற்சியில், தேசிய மக்கள் சக்தி இறங்கி இருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி வலுவான நிலையில் இருக்கின்ற நிலையில், அதனை வீழ்த்த வேண்டு மானால், அந்தக் கட்சிக்கு வாக்களித்த மக்களை தமது பக்கம் இழுக்க

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228

Vlambaram - May 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-05-01 6:24 PM Page 7



# தமிழ்நாடு அரசியல் – மீண்டும் அதிமுக – பாஜக கூட்டணி!

**கண்ணன்**

தமிழ்நாடு அரசியல் களம் மீண்டும் பரபரப்பாகியுள்ளது. 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு கட்சிகள் தயாராகிவிட்டன. திமுக, அதிமுக இரண்டு பெரிய கட்சிகளின் தலைமையில் சிறுசிறு கட்சிகள் இணைந்து, இருமுனைப் போட்டி என்பதுதான் தமிழ்நாட்டின் கடந்த 50 ஆண்டுகள் தேர்தல் வரலாறு. மூப்பனார் தலைமையிலான காங்கிரஸ், விஜயகாந்த் தலைமையிலான தேமுதிக, சீமானின் நாம் தமிழர் கட்சி என மூன்றாவது அணி அல்லது தனித்துப் போட்டி போன்ற முயற்சிகள் அவ்வப்போது இருந்தாலும் அது வெற்றிபெறும் அணியாக எப்போதும் இருந்ததில்லை. மற்றபடி காங்கிரஸ், பாஜக, மதிமுக, பாமக, விசிக, தேமுதிக உட்பட சிறு கட்சிகள் தேர்தலுக்கு தேர்தல் இந்த இரண்டு அணிகளில் ஒன்றுக்கு மாறிக்கொள்ளும். ஆனால் கடந்த 2019, 2021, 2024 மூன்று தேர்தல்களிலும் திமுக அணியில் இருந்த கட்சிகள் மாறாமல் அப்படியே இருக்கின்றன. 2019, 2021 தேர்தல்களில் அதிமுக அணியில் இருந்த பாஜக, பாமக 2024இல் பிரிந்து பாஜக தலைமையில் தனி அணியாகப் போட்டியிட்டன. பாஜகவின் மாநிலத் தலைவர் அண்ணாமலைக்கும் அதிமுக தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடு காரணமாக இவ்விரண்டு கட்சிகளும் 2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை பிரிந்து சந்தித்தன. ஆனால், இரண்டு அணிகளாலும் ஒரு தொகுதியைக்கூட வெல்ல முடியவில்லை. இந்நிலையில், இன்னும் ஓராண்டில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளதால், மத்தியில் ஆளும் கட்சியான பாஜக இந்த முறை எந்தக் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் என்ற எதிர்பார்ப்பு அரசியல் வட்டாரத்தில் மிக முக்கியமானதாக பார்க்கப்பட்டது. அந்த எதிர்பார்ப்புக்கு, பாஜக மூத்த தலைவரும் இந்திய உள்துறை அமைச்சருமான அமித் ஷா, ஏப்ரல் 11 அன்று முற்றுப்புள்ளி வைத்துள்ளார். அதிமுக தலைமையை நேரில் சந்தித்து, மீண்டும் அதிமுக-பாஜக கூட்டணியை உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், அமித் ஷா, “இந்த கூட்டணி 1998ஆம் ஆண்டில் இருந்தே இருக்கும் கூட்டணிதான்” எனக் கூறினார்.



உண்மைதான், முதன்முறையாக பாஜகவை 1998ஆம் ஆண்டு அதிமுக கூட்டணியில் அன்றைய அதிமுக தலைவர் ஜெயலலிதா சேர்த்துக் கொண்டார். அந்தத் தேர்தலில் தமிழ் நாட்டில் 18 தொகுதிகளில் அதிமுக வெற்றி பெற்றது. அந்த 18 உறுப்பினர்கள் ஆதரவுடன்தான் பாஜக ஆட்சியமைத்தது. பிரதமராக வாஜ்பாய் பொறுப்பேற்றார். ஆனால், விரைவிலேயே ஜெயலலிதாவின் சில கோரிக்கைகளை வாஜ்பாய் நிறைவேற்றாததால் வாஜ்பாயுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்த சுப்ரமணிய சுவாமியின் உதவியோடு சோனியா காந்தியை ஒரு தேநீர் விருந்தில் சந்தித்தார் ஜெயலலிதா. தொடர்ந்து பாஜகவுக்கு வழங்கிய ஆதரவைத் திரும்பப் பெற்றுக்கொண்டது, அதிமுக. இதையொட்டி நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில், ஒரு வாக்கு வித்தியாசத்தில் (269-270) பாஜக அரசு கவிழ்ந்தது. அதிமுக கூட்டணிபற்றி சொல்லும்போது “பல இரவுகளை தூக்கமின்றிக் கழித்தேன்” என்று வாஜ்பாய் கூறியதுண்டு. ஜெயலலிதாவும், “என்னுடைய வாழ்நாளில் இனி ஒரு போதும் பாஜகவுடன் கூட்டணி வைக்க மாட்டேன்” என்று தெரிவித்தார்.

அடுத்துவந்த 1999 நாடாளுமன்றத் தேர்தலில், அதிமுக அணியில் காங்கிரஸ் சேர, திமுக அணியில் பாஜக சேர்ந்தது. அந்த தேர்தலில் திமுக - பாஜக கூட்டணி 26 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

ஆனால், 2004 பொதுத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு பாஜக கூட்டணியில் இருந்து திமுக வெளியேறியது. “என்னுடைய வாழ்நாளில் இனி ஒரு போதும் பாஜகவுடன் கூட்டணி வைக்க மாட்டேன்” என்று 1999 தேர்தல் பிரச்சாரத்தில் தெரிவித்த ஜெயலலிதா, 2004 தேர்தலில் பாஜகவுடன் கூட்டணி வைத்தார். அனைத்து தொகுதியிலும் தோல்வியைத் தழுவியது இந்தக் கூட்டணி. பாஜகவுடன் கூட்டணி என்பது இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் உட்பட சிறுபான்மையினர் வாக்குகளை அதிமுக இழக்கக் காரணமாகிறது என்பதை உணர்ந்த ஜெயலலிதா, மீண்டும் “இனி ஒருபோதும் பாஜகவுடன் கூட்டணி கிடையாது” என்று கூறினார். தன் மறைவு வரை அந்த உறுதியை காப்பாற்றவும் செய்தார். 2014 தேர்தலில், தமிழ்நாட்டில் நடைபெற்ற பிரசாரங்கள் அனைத்திலும், “லேடியா மோடியா?” என்று கேள்வி எழுப்பினார். நரேந்திர மோடிமீது ஜெயலலிதாவுக்கு ஒரு மரியாதை இருந்தாலும் பாஜகவுக்கு எதிரான நிலைப்பாடு மட்டுமே தன் வெற்றியை உறுதியாக்கும் எனக் கணக்கிட்டார்.

ஜெயலலிதாவின் மரணத்தைத் தொடர்ந்து, அதிமுகவில் பிளவை ஏற்படுத்தி, சசிகலாவை சிறைக்கு அனுப்பி, அதிமுக முன்னணித் தலைவர்கள் மீதான வழக்குகளை துரிதப்படுத்தி, அதிமுகவை தன் அணிக்குள் கொண்டு வந்தது பாஜக. எனவே, பாஜகவுடன் இணைந்து 2019 நாடாளுமன்றத் தேர்தலையும் 2021ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலையும் சந்தித்தது, அதிமுக. 2019 தேர்தலில் வெற்றிபெற்று மத்தியில் மீண்டும் பாஜக ஆட்சிக்கு வந்தாலும்கூட, தமிழ்நாட்டில் ஓர் இடத்திலும்கூட வெற்றி பெறவில்லை. அதிமுக, தேனி தொகுதியில் மட்டும் வெற்றிபெற்றது. ஓ. பன்னீர்செல்வத்தின் மகன் ரவீந்திரநாத் அந்தத் தொகுதியில் வெற்றி பெற்றார். 2021 சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணி வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. அதிமுக உதவியால் நான்கு தொகுதிகளை மட்டும் பாஜக வென்றது. இந்நிலையில், பாஜக கூட்டணி என்பது சிறுபான்மையினர் வாக்குகளை இழக்கக் காரணமாகிறது என்பதை உணர்ந்த அதிமுக முன்னணி தலைவர்கள், இனி ஒருபோதும் பாஜகவுடன் கூட்டணி இல்லை என்ற ஜெயலலிதா நிலைப்பாட்டை எடுத்தனர்.

எனவே, 2024 நாடாளுமன்ற தேர்தலில் இவ்விரு கட்சிகளும் கூட்டணி அமைக்கவில்லை. பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை தொடர்ச்சியாக அதிமுகவை விமர்சனம் செய்து வந்ததும், அதற்கு பதிலடி தரும் வகையில் அதிமுக வார்த்தைப் போரில் ஈடுபட்டதும்கூட கூட்டணி முறிவுக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

இந்நிலையில்தான், மீண்டும் அதிமுக - பாஜக கூட்டணி ஏற்பட்டுள்ளது. “இது ஒரு இயல்பான கூட்டணி” என்று அமித் ஷா கூறினாலும், பாஜகவின் நிர்பந்தம் (மிரட்டல்) காரணமாக அதிமுக தலைவர்கள் வேறு வழியில்லாமல் இந்தக் கூட்டணிக்கு சம்மதித்துள்ளனர் என்பதை கடந்த ஓராண்டு நிகழ்வுகளை வைத்து எவரும் புரிந்துகொள்ளலாம்.

கூட்டணி பற்றிய அறிவிப்பின்போது பாஜக சார்பில் அமித் ஷாவுடன் தமிழ்நாடு புதிய தலைவர் நயினார் நாகேந்திரன், அண்ணாமலை ஆகியோர் இடம்பெற்று இருந்தனர். அதிமுக சார்பில் எடப்பாடி பழனிசாமி, வேலுமணி, கே.பி. முனுசாமி ஆகியோர் பங்கேற்றனர். “தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் உள்ள இதர கட்சிகளுடன் இணைந்து பாரதிய ஜனதா கட்சியும் அதிமுகவும் வர இருக்கின்ற தேர்தலை இணைந்து சந்திக்க உள்ளது” என அப்போது அமித் ஷா கூறினார்.

மேற்கொண்டு பேசிய அமித் ஷா, “தேசிய அளவில் பிரதமர் நரேந்திர மோதி தலைமையிலும், மாநில அளவில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலும் இந்தக் கூட்டணி தேர்தலை சந்திக்கும். கூட்டணியாகவே ஆட்சி அமைப்போம். அந்தக் கூட்டணி ஆட்சி பழனிசாமி தலைமையில்தான் நடைபெறும்” என்று கூறினார்.

இதனிடையே, அதிமுக_பாஜக கூட்டணி ஏற்பட வேண்டுமென்றால், பாஜக தமிழக தலைவர் பதவியில் இருந்து அண்ணாமலை நீக்கப்பட வேண்டும் என்ற அதிமுகவின் கோரிக்கையை பாஜக ஏற்றுக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சென்னையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்புக்கு முன்னர், தமிழக பாஜக தலைவர் பதவிக்கு நயினார் நாகேந்திரனிடமிருந்து மட்டும் விருப்ப மனு பெறப்பட்டதாக அமித் ஷா தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்திருந்தார். எனவே, நயினார் நாகேந்திரன் தமிழக பாஜக புதிய தலைவராவது உறுதியாகிவிட்டது. நயினார் நாகேந்திரன் முன்னாள் அதிமுககாரர் எனவே, இனி அதிமுகவுடனான பேச்சு வார்த்தைகள் பாஜகவுக்கு சுலபமாகலாம்.

2026 சட்டசபை தேர்தலில் அதிமுக தலைமையில் பாஜக அல்லாமல் மெகா கூட்டணி அமைந்தால், திருமாவளவனின் விசிக இந்த அணியில் சேரலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவி வந்தது. திமுக கூட்டணியில் இருந்து விசிக வெளியேறினால் அந்த இடத்தை நிரப்ப பாமகவும் தயாராகி வந்தது. பாஜகவுடனான கூட்டணிக்கு எதிர்ப்பு தெரிவித்துதான் அன்புமணியை கட்சித் தலைவர் பதவியில் இருந்தே பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் நீக்கினார் எனவும் கூறப்பட்டது. இந்த இரு கட்சிகள் நகர்வு முயற்சிகளுக்கும் அதிமுக-பாஜக கூட்டணி இப்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

2026 தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் அதிமுக-பாஜக கூட்டணி, திமுக கூட்டணி, நடிகர் விஜய்யின் தவெக, சீமானின் நாம் தமிழர் கட்சி என 4 முனைப் போட்டி உருவாகியுள்ளது. விஜய் வருகையால்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

Get in touch for your perfect home!
PUSHPA KANAGARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 647.786.3436
pushpakana33@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215



Vlambaram - May 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-05-01 6:24 PM Page 8



## நாமும் நமது இல்லமும் 677

# புதிய பாதையில் அடுக்குமனை வியாபாரம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

1989இல் ஏற்பட்ட ஆதன அதீத விலை அதிகரிப்பின் தொடர்ச்சியாக 1990ஆம் ஆண்டுகளில் ஆதன வியாபாரம் எதிர்பாராத அளவிற்கு இறக்கத்தைக் கண்டது. 1989இல் அதி உச்சத்தை அப்பொழுது அடைந்திருந்த ஆதன விலையும் வியாபாரமும் தொடர்ச்சியாக 1998வரை இறக்கத்தையே சந்தித்து இருந்தது. இந்தக் காலகட்டத்தில் விற்றல் வாங்கல் தொழிலில் கனடிய மக்கள் பட்ட கஸ்டங்களை கண்கூடாகக் காணக் கூடியதாக இருந்தது.

இதற்கு அந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட வட்டிவீத அதிகரிப்பும், பொருளாதார சுருக்கமும் காரணமாகும். இந்த இறக்கத்திலிருந்து விலையும் வியாபாரமும் மீட்சிபெற பல ஆண்டுகள் எடுத்தன. குறைந்தது 7 ஆண்டுகள் எடுத்தது. 16 வருடங்களுக்குப் பிறகு 2005இல்தான் 1989ஆம் ஆண்டின் உச்ச விலையை அடையக் கூடியதாக இருந்தது.

இன்றைய காலத்தில் 2022இலிருந்து ஏற்பட்ட வட்டிவீத அதிகரிப்பினால் ஆதன வியாபாரம் முடங்கியது. இதனால் புதிதாக நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் நஷ்டத்தைக் கண்டன.

ஏற்கனவே கட்டப்பட்ட, கட்டப்பட இருக்கின்ற அடுக்குமனைகள் விற்கப் படாமல் சந்தையில் நீண்டகாலமாக இருக்கின்றன. இதனால், புதிதாக நிர்மாணம் செய்வதற்குப் பல நிறுவனங்கள் பின்தங்குவதுடன் நிர்மாணம் செய்வதனையும் நிறுத்தி வைத்துள்ளன.

இவ்வாறான நிலைமையினால் எதிர்வரும் காலங்களில் குடியிருப்பதற்கு நிச்சயமாக நெருக்கடி ஏற்படும் என்பது இலகுவாக எதிர்பார்க்கக் கூடியது. ஆதன சம்பந்தப் பட்ட பல ஆய்வு நிறுவனங்களின் எதிர்வு கூறலின்படி, 2027இல் இப்பொழுது கட்டப்படுவதனைவிட அரைவாசிக்குக் குறைவாகவே ஆதனங்கள் கட்டப்படலாம் என அறிய வருகின்றது. மேலும், 2028இல் கடந்த 20 வருடங்களில் குறைந்தளவு அலகுகளே சந்தைக்கு வரலாம் எனவும் தெரிய வருகின்றது.

உதாரணமாக 2025இன் முதல் மூன்று மாதங்களில் Greater Toronto மற்றும் Hamilton பகுதிகளில் (GTA + Hamilton) 497 அடுக்குமனை அலகுகள் மட்டும் நிர்மாணிக்க தொடங்கப்பட்டது. கடந்த 29 வருடங்களில் இதுவே குறைவானது.

2025இல் 30,793 மனைகள் கட்டப்பட்டு கையளிக்கப்பட உள்ளன என எதிர் பார்க்கப்படுகிறது. இந்நிலைமை 2028இல் 10,000இற்கு குறைவாகவே நிர்மாணித்து கையளிக்கப்படலாம் எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அனுபவமிக்க அடுக்கு மனை கட்டும் நிறுவனங்கள்கூட இன்று விற்கப்பட வேண்டிய கட்டிடத்தொகுதியை இன்றைய நிலைமையை கருத்தில் கொண்டு காலம் தாழ்த்தியுள்ளன.

புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கும் பெரும்பான்மையற்ற லிபரல் அரசாங்கம் மற்றைய இரண்டு அடுக்கு அரசுகளுடன் சேர்ந்து தகுந்த முடிவுகள் எடுத்து, மீண்டும் நிர்மாணத்தை அதிகரிப்பதற்கு தகுந்த முடிவுகள் எடுக்கப்படாவிட்டால் 2028-2029 ஆண்டுகளும், அதற்கு அப்பாலும் ஆதன வியாபாரத்தில் புதிய நிலைமை காணப்படும்.

அண்மையில் ரொறொன்ரோ பகுதியில் அனுபவமும் நீண்டகாலம் ஆதன நிர்மாணத்தில் ஈடுபட்டிருந்த நிறுவனம் ஒன்று தனது 860 அடுக்குமனை அலகுகளைக் கொண்ட கட்டித் தொகுதியை நிர்மாணம் செய்வதனை ஏப்ரல் 16, 2025இல் நிறுத்தியுள்ளது. ஏற்கனவே விற்கப்பட்டிருந்த அலகுகளின் முன்பணம் திருப்பிக் கொடுத்துள்ளது. இவ்வாறு பல நிறுவனங்கள் செய்கின்றன. இதனால் புதிதாக அடுக்குமனைகள் நிர்மாணிப்பது குறைந்தே வருகின்றது.

ஏறக்குறைய இரண்டு (2) வருடங்களிற்கு முன்பாக அதிகளவில் அடுக்குமனைகள் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. 2023இல் நிர்மாணம் செய்யப்பட்ட 105,000 அலகுகள், இன்று 2025இல் இந்த எண்ணிக்கை 69,000ஆகக் குறைந்துள்ளது. அத்துடன் புதிய அடுக்குமனைத் தொகுதிகள் (Construction Projects) 20%இலிருந்து 13.5%ஆகக் குறைந்துள்ளது. கட்டிடம் சம்பந்தமான தொழிலாளர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. இது பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். ரொறொன்ரோ பொருளாதாரத்திற்கு கட்டிடத்தொழிலும் முக்கியமான தொன்றாகும்.

### ஓர் அடுக்குமாடி தொகுதியில் ஏற்பட்ட விற்பனை விலையின் மாற்றம்

| | |
|---|---|
| விற்க ஆரம்பித்தபோது சராசரி ஆரம்ப விலை செப்ரெம்பர் 2019 | $812 PSF (சதுரஅடி விலை) |
| இதே தொகுதியில் சராசரி விலை (2021இல்) | ($940-$972) PSF |
| இதே தொகுதியின் சராசரி விலை (2022இல்) | ($1155 - $1387) PSF |
| இதே தொகுதி கட்டி முடித்தபோது சராசரி விலை (2024இல்) | ($850 - $940) SF |

அதிகூடிய விலையாக இருந்த 2022இன் முதல் மூன்று மாதங்களில் அடுக்குமனை வாங்கியோர் 2024இல் ஏறக்குறைய, ஒரு சதுர அடிக்கு ($305 – $447)வரை இழக்க வேண்டியுள்ளது.

உதாரணமாக, 600 சதுர அடி மனை 2022இன் ஆரம்பத்தில் வாங்கியிருந்தால் ($183,000 - $268,200) வரை பணத்தை அல்லது பெறுமதியை இன்று இழக்கக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது. இதுவே இன்றைய நிலைப்பாடு. இவ்வாறான நிலைமைகள் பல தடவை முன்பு ஏற்பட்டுள்ளன. இந்நிலைமையை முன்பும் பார்த்திருக்கிறேன். மாறும் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்? புதிய அரசின் எதிர் காலக் கொள்கைகள் வழிசமைக்கும்?

# பிள்ளையானும்...

6ஆம் பக்கத்தொடர்ச்சி

வேண்டும். பிள்ளையானும் தமிழரசுக் கட்சியும் எதிர் எதிர்முகாம்களைச் சேர்ந்தவை.

பிள்ளையானை கைதுசெய்து சிறைக்குத் தள்ளினால், தமிழரசு கட்சியின் பக்கம் உள்ள வாக்குகளை தமது பக்கம் இழுக்க முடியும் என தேசிய மக்கள் சக்தி கணக்குப் போட்டது.

கிழக்கில் மட்டுமல்ல வடக்கிலும் இது வாக்குகளை வளைக்கப் பயன்படும். அதன் அடிப்படையில்தான் பிள்ளையான் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்.

பிள்ளையானைக் கைது செய்வது அல்லது அவர்மீது நடவடிக்கை எடுப்பதை மாத்திரம் இலக்கு வைத்து, தமிழ் வாக்காளர்கள் செயற்படுவர் என தேசிய மக்கள் சக்தி நம்புகிறது.

ஆனால் தமிழ் மக்கள் அப்படி வாக்களிப் பார்களா என்பதைத் தேர்தல் முடிவுகளின் மூலம்தான் தெரிந்துகொள்ள முடியும்.



பிள்ளையானை வைத்து, கிழக்கில் அரசியல் நடத்தும் தேசிய மக்கள் சக்திக்கு, உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் எவ்வாறு பதில் கொடுக்கப் போகின்றனர்?

# கனடாவின்...

1ஆம் பக்கத்தொடர்ச்சி

வாக்குகளைப் பெற்று 8,981 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டியுள்ளார்.



Gary Anandasangaree

கனடாவின் சனத்தொகை 38.1 மில்லியன் அதில் வாக்களிக்கத் தகுதிபெற்றவர்களின் எண்ணிக்கை 28.5 மில்லியன். தேர்தலுக்கு முற்கூட்டிய வாக்குப் பதிவின் போது 7.3 மில்லியன் வாக்குகள் (25%) பதிவுசெய்யப்பட்டிருந்தன. இதற்கு முந்தைய தேர்தல்களில் முற்கூட்டிய வாக்குப் பதிவின்போது 5.8 மில்லியன் வாக்குகளே அதிகமாகப் பதியப்பட்டவையாகும். இவ்வாறு 25%ஆனோர் முற்கூட்டிய வாக்குப்பதிவின்போது தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தாலும் தேர்தலின்போது வாக்களித்தவர்களின் எண்ணிக்கையைச் சேர்த்து 68.7% ஆன வாக்களிக்கத் தகுதி பெற்றோரே இம் முறை தேர்தலில் வாக்களித்திருந்தனர்.



Juanita Nathan

இது 2021ஆம் ஆண்டு தேர்தலின் வாக்களித்தோரைவிட (62.5%) அதிகம். 1993ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வாக்களித்தவர்களின் எண்ணிக்கைக்கு (69.6%) அடுத்ததாக இது இருக்கிறது. 1958ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அதிகூடிய மக்கள் (79.4%) வாக்களித்திருந்தனர்.

இம்முறை நடைபெற்ற தேர்தலில் ஆளும் கட்சியாகத் தெரிவான லிபரல் கட்சி 43.7%ஆன வாக்குகளைப் பெற்றுள்ளது. அத்துடன் எதிர்க்கட்சியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பழமைவாதக் கட்சியும் 41.3% வாக்குகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நல்வாழ்வு பயிற்சி/ Life Coaching என்றால் என்ன? பகுதி 2

உஷா மதிவாணன்
M. A (Social Work)
அலைபேசி: 647.808.2904

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்னும் சங்க இலக்கியமான புறநானூற்றுப் பாடல் பழங்காலத் தமிழரின் பண்பாட்டை விளக்குகிறது. இப்பாடலை எழுதிய கணியன் பூங்குன்றனாரின் இரு பாடல்கள் மட்டுமே நமக்கு கிடைத்துள்ளது. அப்பாடலின் இரண்டாவது வரி “தீதும் நன்றும் பிறர் தர வாரா” என்பதாகும். இப்பாடலை முழுமையாகப் படித்து, புரிந்து கொண்டோமானால் ஒரு மிகப்பெரிய ஆன்மீக தத்துவத்தை மிகவும் எளிதாக நமக்கு இப்பாடல் உணர்த்துகிறது என்பதை அறிய முடியும். இப்பாடலின் இரண்டாவது வரியான “தீதும் நன்றும் பிறர் தர வாரா” என்பதுதான் நல்வாழ்வு பயிற்சியின் அடித்தளமாக இருக்கிறது என்பது எனது புரிதல். நல்வாழ்வு பயிற்சி முறையின் ஒரு பயிற்சி உரையாடலை உங்களுக்குத் உதாரணமாக தர விரும்புகிறேன்.

பயிற்சியாளருடன் வாடிக்கையாளருக்கு முதல் சந்திப்பு, அறிமுகம் ஆகியவை முடிந்தபின் இரண்டாவது சந்திப்பில் பயிற்சியாளர் கேட்கிறார். நீங்கள் வாழ்க்கையில் ஒரு வெற்றி பெற்ற மனிதனாக உலகத்திற்குத் தெரிகிறீர்கள் என்றும், நீங்களும் அவ்வாறே உணர்வதாகவும் கூறினீர்கள். ஆனாலும் வாழ்க்கையில் தனிப்பட்ட முறையில் தற்போது மிகவும் சலிப்புடனும், எதிலும் ஆர்வம் இன்றியும் இருக்கிறேன். சிறு வயதில் தொடர்ந்து டென்னிஸ் விளையாடுவேன். வாழ்க்கை மிக உற்சாகமாகவும், அந்நேரங்கள் மகிழ்ச்சியின் உச்சமாகவும் இருந்தது. எனது முப்பதாவது வயதுவரை நான் தொடர்ந்து விளையாடிக் கொண்டுதான் இருந்தேன். பிறகு வாழ்க்கையின் பல்வேறு அழுத்தங்களால் எனது தனிப்பட்ட முறையிலான அந்த சந்தோஷத்தை என்னால் தொடர்ந்து அனுபவிக்க முடியவில்லை. இப்போது 50 வயதில் எனது பிள்ளைகள் வாழ்க்கையில் ஓரளவு நல்ல நிலைமைக்கு வந்து விட்டார்கள். வேறு எந்தப் பெரிய பிரச்சினைகளும் இல்லை. ஆனால் வாழ்க்கை மிகவும் சோர்வைத் தருகிறது. அதனால் எனது மனநிலை பாதிக்கப்படுகிறது அது மற்றவர்களையும் பாதிக்கின்றது எதிலும் ஆர்வம் இல்லை என்ன செய்வது என்பதற்காகத்தான் இந்த நல்வாழ்வுப் பயிற்சியை எடுத்துக் கொள்ள வந்துள்ளேன். என்ன செய்யலாம் என்று கேட்டீர்கள். அது குறித்து விவரமாகப் பேசலாமா என்று கேட்டார். பிறகு பல்வேறு முக்கியமான நேரிடையான கேள்விகளை அந்த வாடிக்கையாளரை பயிற்சியாளர் கேட்க ஆரம்பித்தார்.

எந்த நேரங்களில், எந்தக் காரணத்தால், எவ்விதமான தூண்டுதல்களால் எந்த மனநிலையில் இருக்கும்போது வாடிக்கையாளரின் மனம் அந்தச் சோர்வு நிலைக்குச் செல்கிறது என்பதை இருவருமாகச் சேர்ந்து ஆராய்ந்து ஒரு தெளிவான முடிவுக்குவர முயன்றனர். சில உதாரணங்களைத் தருமாறு பயிற்சியாளர் கேட்கிறார்.

வாடிக்கையாளருக்கு உடனடியாக அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் கூற முடியவில்லை. இதற்குள் அவர்களது ஒரு மணி நேர அமர்வு முடிவுக்கு வருகிறது. அடுத்த இரண்டு வாரத்திற்குப் பிறகு அடுத்த அமர்வுக்கு முன் இந்தக் கேள்விகளுக்குப் பதில்களைக் குறித்து சிந்தித்து எழுதியோ அல்லது குரல் பதிவு மூலமாகவோ எடுத்து வர வாடிக்கையாளர் பணிக்கப்படுகிறார். இந்தக் கேள்விகளுக்கான பதில்களில் வாடிக்கையாளரின் பங்கு என்ன என்பதையும் அவர் ஆழ்ந்து யோசிக்க வேண்டும் என்று பயிற்சியாளர் கேட்டுக் கொள்கிறார்.

நமது அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நாம் எப்பொழுதும் வெளியில் இருக்கும் காரணங்களை மட்டுமே யோசித்துக் கொண்டிருக்கிறோம். தத்துவமேதையான ஓஷோவின் கூற்றுப்படி “வாழ்க்கை எந்தவிதமான நோக்கமும் இன்றி சுழன்று கொண்டே இருக்கிறது. நீங்கள் ஒரு நோக்கத்தை ஸ்திரமாகப் பற்றிக் கொள்ளாவிட்டால் வாழ்க்கை ஒரு சக்கரத்தைப்போல திரும்பத் திரும்ப ஒரே மாதிரித்தான் ஓடும்”.

நமது வாழ்க்கையை எப்படி நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பது குறித்த விழிப்புணர்வு நமக்கு இருக்கிறதா? இருந்தால்தான் வாழ்வை முழுமையாக நம்மால் அனுபவிக்க முடியும்.

நண்பர்களுடன் அமர்ந்து கொண்டிருக்கும் போது கையில் இருக்கும் அலைபேசியை பார்த்துக் கொண்டிருக்கிறோம். நமது உணர்வுகளை குப்பையான உணவுகளுடன் சேர்ந்து உண்டு விடுகிறோம். ஒரு நாளைக்கு நமது முகநூல் பக்கத்தை பத்தாயிரம் தடவை திறந்து பார்க்கிறோம். இங்கு இக்கணத்தை குறித்த விழிப்புணர்வு இருந்தாலொழிய நம்முடைய வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தை, நம்மில் ஒளிந்திருக்கும் அரிய திறமைகளை நம்மால் கண்டுகொள்ளவே முடியாது. சிந்தியுங்கள் நண்பர்களே! மீண்டும் சந்திப்போம்!

## அன்புத் தெய்வம் அம்மா



மாசி லாத தூய அன்பை
மகிழ்ந்து பொழிந்த அன்னையைப்
பேசிப் போற்ற வார்த்தை இல்லை!
பெற்ற அம்மா தெய்வமே!

விரத மிருந்து பரனைத் தொழுது
வேண்டி வரத்தாற் பெற்று
இரவு பகலாய்க் கண்ணின் மணிபோல்
என்னை வளர்த்தாள் அன்னையே!

நேசக் கரத்தால் என்னைத் தூக்கி
நெஞ்சில் அணைத்து மகிழ்ந்தவள்
பாசத் தோடு ஆசை பொங்கப்
பண்பில் மலர வைத்தவள்!

பஞ்சு அஞ்சும் பாதந் தன்னைப்
பற்றிக் கண்ணில் ஒற்றியே
பிஞ்சுக் கையின் விரல்கள் அஞ்சைப்
பிடித்துக் கொஞ்சும் அன்பினாள்!

மெள்ளப் பாலைக் குடிக்கும் போது
மிகவும் இனிக்கும் தமிழ்தனை
அள்ளி அள்ளிக் கலந்து எனக்கு
அன்பாய் ஊட்டி வளர்த்தவள்!

நாணி நின்று உடலைக் கோணி
நாவால் மழலை பொழிந்து
வாணி வடிக்கும் என்னைத் தூக்கி
வருடி அணைத்த தாயவள்!

மழலைக் குரலால் மதுரஞ் சொட்ட
மகன்நான் பாடும் நேரத்தில்
நிழலைப் போலத் தொடர்ந்து கேட்டு
நித்தம் மகிழ்ந்த அன்னையே!

நெஞ்சில் என்தன் தலையைச் சாய்த்து
நீவி மகிழ்ந்த தாயவள்
கெஞ்சும் விழியால் அன்பைச் சிந்திக்
கொஞ்சும் தெய்வத் தாயவள்!

கிள்ளை மொழியிற் பேசும் என்னை
மெள்ள அள்ளித் தூக்கியே
வெள்ளைப் பட்டுச் சட்டை போட்டுப்
பள்ளிக் கனுப்பி மகிழ்ந்தவள்!

தமிழர் ஓம்பிக் காத்து வந்த
விழுமி யங்கள் யாவையும்
அமிழ்தம் போல ஊட்டி வளர்த்த
அறிவுத் தெய்வத் தாயவள்!

ஓங்கு புகழ் பெற்ற வர்கள்
உண்மைச் சரிதம் கூறியே
தூங்க வைக்க நீதி நேர்மை
துலங்கும் கதைகள் சொன்னவள்!

நீதி நேர்மை ஓதி ஒழுக்க
நெறியில் என்னை வளர்த்தவள்
சாதி இல்லைத் தெய்வம் ஒன்று
சமயம் அன்பே என்றவள்!

விழியைக் காக்கும் இமைபோல் அன்பு
வேலி கட்டி வளர்த்தவள்
வழி நடத்தும் தந்தையின் சொல்
மந்தி ரந்தான் என்றவள்!

சின்னப் பிள்ளை என்று நானும்
செய்த குறும்பைப் பொறுத்தவள்
மன்னித்(து) அணைத்து வாழ வைத்த
மனித தெய்வம் அன்னையே!



இளமுருகனார் பாரதி
பல்வைத்திய கலாநிதி

## குரு அரவிந்தன் வாசகர் வட்டம் திறனாய்வுப்போட்டி – 3

### 2025 ஆண்டு திறனாய்வுப் போட்டி– 3இல் பரிசு பெற்றவர்களின் விவரம்:

இந்தப் போட்டிக்கு 134 திறனாய்வுக்கட்டுரைகள் இந்தியா, இலங்கை, பிரித்தானியா, மலேசியா, பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க், அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து கிடைத்திருந்தன. எல்லாக் கட்டுரைகளும் சிறப்பாகவே இருந்தன. ஆனாலும் இறுதிச்சுற்றுக்காகப் 18 கட்டுரைகள் தெரிவாகி, அவற்றுக்குப் பரிசுகள் கிடைத்திருக்கின்றன. பரிசுகள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும். போட்டியின் நடுவர்களாகப் பேராசிரியர் கரு முத்தயா (தமிழ்நாடு), ஆய்வாளர் முனைவர் வாசுகி நகுலராஜா (கனடா), ஆய்வாளர் டாக்டர் மேரி கியூரி போல் (கனடா), எழுத்தாளர் கே. எஸ் சுதாகர் (அவுஸ்ரேலியா) ஆகியோர் பணியாற்றினார்கள். இவர்களுக்கும் பங்குபற்றியவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

முதலாம் பரிசு: சிவகலை சிவப்பிரகாசம், வவுனியா, இலங்கை.
இரண்டாம் பரிசு: சகோதரி அருள் சுனிலா, தேனி, தமிழ்நாடு.
மூன்றாம் பரிசு: மரு.வெ. மாலாபாரதி. ஆரணி. தமிழ்நாடு.
நான்காம் பரிசு: வரதராஜன் ஜூனியர்தேஜ் சீர்காழி, தமிழ்நாடு.
ஐந்தாம் பரிசு: (1) திவானி கந்தசாமி, வவுனியா, இலங்கை.
(2) சீ. கவிதாராணி, பாசறை, இலங்கை.

பாராட்டுப்பரிசுகள்: சிவநேஸ் ரஞ்சிதா, கெக்கிராவ. இலங்கை. எஸ். ராமேஸ்வரன், கொழும்பு -5. திருமதி பவானி சச்சிதானந்தன், வத்தளை, இலங்கை. பி.பி. புஸ்பராஜா, கொழும்பு -1. சந்திரகௌரி சிவபாலன், ஜெர்மனி. சிந்துஜா சிவகுமார், அவுஸ்ரேலியா. த.வேல்முருகன், ஈரோடு, தமிழ்நாடு. க.பூமணி, சென்னை, தமிழ்நாடு. இக்பால் அலி, பரகஹதெனியா, இலங்கை. விமலாதேவி புசுப்பநாதன், ரொறொன்ரோ, கனடா. தீபரதி குபேந்திரன், வாணியம்பாடி, தமிழ்நாடு. பன்னீர்ச்செல்வம் கருப்பையா, கோலாலம்பூர், மலேசியா.

சுலோச்சனா அருண் (kurufanclub@gmail.com)
செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.

Vlambaram - May 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-05-01 6:24 PM Page 10



# நானிலம் போற்றும் நட்பு - 65



– அகணி –
authorakani@gmail.com

இன்னா நாற்பதின் பதினோராவது செய்யுளிற்குச் செல்வோம்.

“உடம்பா டில்லாத மனைவிதோ ளின்னா
இடனில் சிறியரோ டியர்த்தநண் பின்னா
இடங்கழி யாளர் தொடர்பின்னா வின்னா
கடனுடையார் காணப் புகல்”

இந்தச் செய்யுளில் புலவர் மனித வாழ்வில் துன்பம் தரக்கூடிய நான்கு விடயங்களைச் செய்யுளின் நான்கு அடிகளிலும் இன்னாதவை இவை என்பது போலக் கூறியுள்ளார். புலவர் கூறிய நான்கு விடயங்களிலும் எதையும் அவர் முதன்மையாகக் கூறி ஏனையவை மூலம் வலுவூட்டச் செய்துள்ளதாகக் கூற முடியவில்லை. “உடம்பா டில்லாத மனைவிதோ ளின்னா” என்ற முதலாவது அடி உள்ளம் பொருத்தம் இல்லாத மனைவியின் தோளினைச் சேர்தல் துன்பம் என்றும், “இடனில் சிறியரோ டியர்த்தநண் பின்னா” என்ற இரண்டாவது அடியில் பரந்த உள்ளமில்லாத சிறுமையாரிடத்து நட்பு கொள்ளுதல் துன்பம் என்றும், “இடங்கழி யாளர் தொடர்பின்னா வின்னா” என்ற மூன்றாம் அடியில் அதிக காமம் உடையவரது சேர்க்கை துன்பத்தைத் தரும் என்றும் “கடனுடையார் காணப் புகல்” என்ற நான்காம் அடியில் கடன் கொடுத்தவரைக் காணச் செல்லுதல் துன்பத்திற்குரியதாகும் என்றும் எடுத்துக் கூறியுள்ளார்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றிதொண்ணூறாவது பாடலைக் கவனிப்போம். இது, பூதம் புல்லன் என்னும் புலவர் பாடிய செய்யுள். கார்காலம் வந்தும், பொருள் தேடச் சென்ற தலைவர் திரும்பி வராதது கண்டு, தலைவி, தோழியிடம் உரைத்தது. இது முல்லைத்திணை சார்ந்தது.

தலைவி தனித்திருக்கின்றாள் நள்ளிரவு நேரம். அப்பொழுதும் அவளுக்கு உறக்கம் வரவில்லை. இடியிடிக்கின்றது, மழையும் பெய்கின்றது. இந்த நிலையில் காதலனைப் பிரிந்திருக்கும் அவள் எப்படித்தான் தூங்குவாள்?

தலைவியின் துக்கம் அளவு கடந்தது. தன் துக்கத்தை வெளியில் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அதை யாரிடம் சொல்வது? தன்னிடம் அன்பு காட்டி ஆதரவளிப்பவரிடந்தானே சொல்ல முடியும்? அவளிடம் ஆறாத அன்பு கொண்ட தோழி தான் அண்டையிலிருந்தாள். அவளிடம் தன் துக்கத்தை வெளியிட்டாள் தலைவி. இந்த நிகழ்ச்சியை உரைப்பதுதான் இச்செய்யுள்.

“நெறியிரும் கதுப்பொடு பெருந்தோள் நீவிச்
செறிவளை நெகிழச் செய் பொருட்கு அகன்றோர்
அறிவர் கொல்? வாழி தோழி பொறிவரி
வெம்சின அரவின் பைம்தலை துமிய,
உரமுரும் உரறும் அரையிருள் நடுநாள்.
நல்லேறு இயங்குதோறு இயம்பும்,
பல் ஆன் தொழுவத்து ஒரு மணிக்குரலே.”

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.
‘தோழியே! அன்று அவர் பொருள் தேடப் புறப்படும் போது என்னிடம் அன்புரைகள் கூறினார். எனது அடர்ந்த தலை மயிரைத் தடவிக் கொடுத்தார். எனது பெரிய தோள்களையும் தடவிக்கொடுத்தார். ஆயினும் அவர் பிரிவை எண்ணி என் உடம்பு இளைக்கத்தான் செய்தது. அதனால் என் கை வளையல்கள் தாமே கழன்று விழுந்தன. இப்படி எனக்குச் சமாதானங் கூறிவிட்டுப் பொருள் தேடச் சென்றார் அவர். இப்பொழுது கொடிய பாம்புகளின் பசுமையான தலைகள் துண்டிக்கும்படி இடி இடிக்கின்றது. மழையும் பெய்கின்றது. இந்த இரவிலே, பல பசுக்கள் நிறைந்த கொட்டிலிலே நல்ல காளை அங்குமிங்கும் போய்க் கொண்டிருக்கிறது. இது அசையுந்தோறும், அதன் கழுத்திலே கட்டியிருக்கும் மணியின் ஓசை மட்டுமே கேட்கின்றது. இந்த மணியோசை என்னை உறங்க விடவில்லை. அங்குள்ள பசுக்கள் அந்த நல்ல காளையுடன் இன்ப மடைந்திருப்பதையே அந்த மணியோசை காட்டுகின்றது. இதைத் தலைவர் அறிவாரோ? இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றித்தொண்ணூற்றொன்றாவது பாடலைக் கவனிப்போம்.

இப்பாடலின் ஆசிரியர் பெயர் காணப்படவில்லை. ‘என் துன்பத்தைப் பற்றி எண்ணாமல் தலைவர் பிரிந்து போனார். அவர் வந்தால் என்னைத் தொடவிட மாட்டேன் என்று தோழியிடம் தலைவி சொல்லியது.

தலைவன் பிரிந்து போய்விட்டான். தலைவி தனித்திருக்கின்றாள். அவன் வரக்கூடிய பருவம் வந்து விட்டது. ஆனால் அவன் மட்டும் வரவில்லை. இதைக் கண்டு தலைவி வருந்துகின்றாள். வருத்தத்தோடு அவளுக்குக் கோபமும் வருகின்றது. தனது துன்பத்தையும், சினத்தையும் தோழியிடம் உரைக்கின்றாள்.

“உதுக்காண் அதுவே! இது என் மொழிகோ!
நோனா சினையிருந்த இரும் தோட்டுப்புள்இனம்
தாம் புணர்ந்தமையின் பிரிந்தோர் உள்ளாத்
தீம் குரல் அகவக் கேட்டும், நீங்கிய
ஏதிலாளர் இவண் வரின், போதின்
பொம்மல் ஓதியும் புனையல்!
எம்முந் தொடாஅல்! என்கு வெம் மன்னே”.

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

“தோழியே! அதோ பார்! இதனால் எனக்கு உண்டாகும் துன்பத்தை நான் எப்படித்தான் சொல்லுவேன். பெரிய மரக்கிளைகள். அவற்றிலே பறவைக் கூட்டங்கள் அவை அன்புடன் ஒன்றோடு ஒன்று சேர்ந்து சிந்தை களிக்கின்றன. சிறகுகளை அடித்துக் கொண்டு சிரித்து விளையாடுகின்றன.

அவை கூடி மகிழும் களிப்பால் காதலனைப் பிரிந்து தனித்திருக்கும் மகளிரின் துன்பத்தைப்பற்றிச் சிறிதும் கருதவேயில்லை. தமது இனிய குரலால் அவை துணைவர்களைக் கூவி அழைத்துக் கொள்கின்றன. ,ந்தக் குரலைக் கேட்டுங்கூட அவர் பிரிந்து போனார். என்னிடத்தில் அன்பில்லாத அயலாரைப் போலப் பிரிந்து போனார்.

அவர் திரும்பி வரும் போது என்ன செய்கிறேன் பார். அவர் வந்தவுடன் என்னை மகிழ்வூட்டுவதற்காக என்னிடம் நெருங்குவார் இனிய மொழிகள் சொல்லுவார் மலர்கள் நிறைந்த எனது கூந்தலைச் சீவி அழகு படுத்த வருவார். அப்பொழுது ‘என் கூந்தலை மலர்களால் அழகுபடுத்த வேண்டாம் என்னையும் தொடவேண்டாம் என்று சொல்லப் போகிறேன் நான்.” இதுவே இச்செய்யுளில் அமைந்திருக்கும் பொருள்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றித் தொண்ணூற்றியிரண்டாவது பாடலைக் கவனிப்போம்.

இளவேனிற் பருவத்திலே தலைவனின்றித் தனித்திருக்கின்றாள் ஒரு தலைவி. அவள் பறவைகளின் இன்ப வாழ்வைப் பார்த்து ஏக்கமடைகின்றாள். இ,ப்பறவைகள் தங்கள் காதலர்களுடன் இணைந்து இன்புறுகின்றன் இத்தகைய பேறு எனக்குக் கிடைக்கவில்லையே என்பதுதான் அவள் ஏக்கம்.

தலைவியின் ஏக்கத்தைக் கண்ட தோழி அவளுக்கு எத்தனையோ ஆறுதல் மொழிகள் சொன்னாள். “தலைவர் வந்து விடுவார் நீ உள்ளங் கலங்க வேண்டாம் தலைவர் நம்மிடம் அன்புள்ளவர் அவர் வராமலிருக்க மாட்டார் என்று எவ்வளவோ எடுத்துச் சொன்னாள். அப்படியும் தலைவியின் துக்கம் தணியவில்லை. அவள் நெஞ்சத்தால் துக்கத்தைத் தாங்க முடியவில்லை. வாய்விட்டு அழவும் தொடங்கிவிட்டாள் கண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும்படி அழுதாள். அப்பொழுதும் தோழி ஏதேதோ ஆறுதல் மொழிகளைச் சொல்லிக்கொண்டே இருந்தாள். அது கேட்ட தலைவி அவளுக்கு மறுமொழியுரைத்தாள். அந்த மறுமொழிதான் இச்செய்யுள்.

“ஈங்கே வருவர், இனையல், அவர் என,
அழா அற்கோ வினியே நோய் நொந்துறைவி
மின்னின் தூவி கருங்குயில், பொன்னின்,
உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்,
வறும் குரல் கூந்தல் தைவரு வேனே.

> "A friend to all is a friend to none."
> - Aristotle -

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்”.
“தலைவன் இல்லாமையால் நான் மிகவும் துன்புறுகின்றேன். எவ்வளவுதான் பொறுத்துப் பார்த்தாலும் என் துன்பத்தை என்னால் தாங்க முடியவேயில்லை. இந்த நிலையில் இனி நீ அழவேண்டாம் தலைவர் இங்கே வந்து விடுவார் அவர் வராமல் தங்கிவிட மாட்டார். நீ அவரில்லாமல் வருந்துவது போல, அவரும் நீ இல்லாமல் வருந்துவார். உனக்குள்ள துக்கம் அவருக்கும் உண்டு அவர் உன்னிடம் அன்புள்ளவர்! நீ அவரிடம் எவ்வளவு காதல் கொண்டிருக்கிறாயோ, அவ்வளவு காதல் அவரும் உன்னிடம் கொண்டிருக்கின்றார் ஆதலால் வந்து விடுவார் நீ வருந்தாதே” என்று சொல்லிக் கொண்டே இருக்கின்றாய்.

உன் சொற்கள் என் உள்ளத்தில் ஏழவில்லை. இதுவோ இளவேனிற் காலம். மின்னுகின்ற ஒளியுள்ள சிறகுகளையுடைய குயில்களைப் பார். அவை மாமரத்தின் கிளைகளிலே அமர்ந்து, மாம்பூக்களில் உள்ள மகரந்தங்களைக் கோதுகின்றன. அந்த மகரந்தப் பொடிகள் அக்குயில்களின் சிறகுகளிலே அப்பிக் கொள்ளுகின்றன. இதனால் அச்சிறகுகள் பொன்னை உரைத்த உரை கல்லைப் போல் காணப்படுகின்றன. இத்தகைய இளவேனிற் காலத்திலும் அவர் வரவில்லை.

நானும் என் துக்கம் தாங்க முடியாமல், எனது கூந்தலைத் தடவிக் கொண்டிருக்கின்றேன். என் கூந்தலும் எண்ணெய் தடவாமலும், சீவாமலும், மலர் அணியாமலும் வெறுமையாகக் கிடக்கின்றது. இக்கூந்தலைத்தான் தடவிக் கொண்டு துன்பத்தால் வாடுகின்றேன்! இதுவே இச்செய்யுளில் அமைந்த பொருள்.

இந்த மூன்று பாடல்களிலும் நட்பின் பெருமை நன்கு புலப்படுகிறது.
நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

Vlambaram - May 01, 2025 new.qxp_Vlambaram-Front 2025-05-01 6:24 PM Page 11



Words of Peace
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
www.timelesstoday.com
www.premrawat.com

## Practice makes perfect

திரு. பிரேம் ராவத் (Prem Rawat) அவர்கள், பல நாடுகளுக்கும் சென்று 100 மில்லியனிற்கும் அதிகமான மக்களிடம், அமைதியை உணர்வது ஒவ்வொரு மனிதனுக்கும் சாத்தியம் என நேரடியாக உரையாற்றி வருகின்றார். அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளை இங்கே பகிர்ந்து கொள்கின்றோம்.

வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான விடயங்களைப் பயிற்சி செய்வதனால் பயனடையலாம். வாழ்க்கையில் எதனைப் பயிற்சி செய்கின்றீர்களோ அதில் நீங்கள் கைதேர்ந்தவராகி விடுவீர்கள். நீங்கள் மிகவும் விரைவாக கோபத்திற்கும், மன அழுத்தத்திற்கும், பதட்டத்திற்கும் அல்லது கவலைக்கும் உட்படுபவராயின் அவ்வாறான விடயங்களையே நீங்கள் எப்பொழுதும் பயிற்சி செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்றே தோன்றுகின்றது. உங்களது எண்ணங்களை மாற்றியமைத்து வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான விடயங்களை பயிற்சி செய்வதற்கு இது நல்ல நேரமல்லவா?

நான் வில்வித்தை செய்து காட்டும் வில்லாளி ஒருவனின் கதையைப்பற்றி இங்கு கூறவிரும்புகின்றேன். அவன் கிராமம் கிராமமாகச் சென்று மக்கள் முன்பு வில்வித்தைகளைச் செய்துகாட்டி பணம் சம்பாதிப்பது வழக்கம். சிறு வயதிலிருந்தே அவன் வில்வித்தையைப் பயிற்சி செய்து அதில் மிகவும் கைதேர்ந்தவனாகி விட்டான். அவன் ஊர் ஊராகச் சென்று திருவிழாக்களிலோ அல்லது எந்தப் பொழுதுபோக்கையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் கிராம மக்களின் முன்போ தன் வில்வித்தையைக் காட்டுவான்.

வில்லாளி ஒரு சின்ன இலக்கு வைப்பான். பின்பு வில்அம்பை வைத்துக்கொண்டு தன் திறமைகளைக் காட்டுவிப்பான். இலக்கில் ஏற்கனவே தைத்திருந்த அம்புகளைப் பிளப்பான் அல்லது வளைந்திருந்த அம்பால் பல வித்தைகளைக் காட்டுவித்தான். கிராம மக்களும் அவனுடைய எல்லா வித்தைகளையும் ரசித்து கைதட்டி பாராட்டுவார்கள். மேலும் அவனுடைய அபாரமான வித்தைகளைச் செய்து காட்டுமாறும் ஆரவாரம் செய்வார்கள். இவ்வாறான நிகழ்ச்சிகள் பல வருடங்களாக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. கைதேர்ந்த வில்லாளி என்ற புகழைச் சம்பாதித்த அவனுக்கு நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக கர்வம் தோன்ற ஆரம்பித்தது.

ஒரு நாள் கிராமத் திருவிழாவொன்றில் அவன் தன் வித்தைகளைக் காட்டிக் கொண்டிருந்தபோது யாரும் எதிர்பாராத ஒரு விடயம் நிகழ்ந்தது. அங்கே ஒரு பெரிய கூட்டம் கூடியிருந்தது, வில்லாளி வழமைபோல் தன் ஆற்றல்களைக் காட்டிக் கொண்டிருந்தான். மக்களும் கைதட்டி தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர். ஆனால் கைதட்டல் ஒலி அடங்கியபோது பின்னால் இருந்து இதற்கு பயிற்சிதான் காரணம் என்று ஒரு குரல் சொல்வது மெல்லியதாக அவன் காதில் விழுந்தது. முதலில் அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. யாரோ முட்டாள் உளறிக் கொண்டிருக்கின்றான் என்று தனக்குள் சொல்லிக்கொண்டு அடுத்த காட்சிக்கு குறிபார்க்க ஆரம்பித்தான். மக்களும் ஆரவாரத்துடன் கை தட்டினார்கள் பின்னாலிருந்து மீண்டும் பயிற்சிதான் இதற்கு காரணம் என்று அதே எரிச்சலூட்டும் குரல் கேட்டது.

அவன் மறுபடியும் குறி பார்த்து அம்பு எய்தி கூடியிருந்தவர்களை அசத்தினான். ஆனால் மிகவும் எரிச்சலடைந்த அவன் தன் வில்வித்தையை சீக்கிரமே முடித்துக் கொண்டு எரிச்சலூட்டிய வார்த்தைகளைக் கூறியவன் யார் என்று தேட ஆரம்பித்தான். அங்கே கூட்டத்திற்கு பின்னால் இரண்டு பெரிய எண்ணைக் குடங்களுடனும் சில வெற்றுப் போத்தல்களுடனும் உட்கார்ந்திருந்த ஒரு எண்ணை வியாபாரியைக் கண்டான்.

பயிற்சிதான் இதற்குக் காரணம் என்று கூறியது நீதானா என்று வினாவினான் வில்வித்தைக்காரன். ஆமாம் நான் தான் என்று பதிலளித்தான் வியாபாரி. பயிற்சியினால்தான் என்று சொல்கின்றாயே அதன் அர்த்தம் என்ன? நான் தலைசிறந்த நிபுணன் என்று உனக்குத் தெரியாதா? என்னைப்போல் சிறந்த திறமைகள் உள்ளவன் வேறு யாருமே இங்கே கிடையாது என்றான் வில்லாளி. கோபப்பட வேண்டிய அவசியம் இல்லை, தொடர்ந்து பயிற்சி செய்ததினால்தான் நீங்கள் இந்தக் கலையில் சிறந்தவராக விளங்குகின்றீர்கள் என்று கூறினான் எண்ணை வியாபாரி. பயிற்சியினால்தான் என்றால் யார் வேண்டுமானாலும் செய்யலாமே, ஆனால் எனக்கு மட்டும்தான் இந்த ஆற்றல் இருக்கின்றது என்று பதிலுக்கு வில்லாளி கூறினான்.

அந்த எண்ணை வியாபாரி தன் சட்டைப் பையிலிருந்து ஒரு சிறிய வட்டமான துவாரம் போடப்பட்ட நாணயம் ஒன்றை எடுத்து ஒரு வெற்றுப் போத்தலின் மேல் வைத்தான். பெரிய குடத்திலிருந்த எண்ணையை நாணயத்தின் சிறிய துவாரத்தின் வழியாக நேராக வெற்றுப் போத்தலினுள் ஒரு சிறிய துளிகூட கீழே சொட்டாமல் ஊற்றினான். பின்பு அவன் வில்லாளியை நோக்கி நீங்கள் இதைப் போல இப்போது செய்துகாட்ட முடியுமா என்றான். தன்னால் அதைச் செய்யவே முடியாது என்று புரிந்த வில்லாளியும் வியாபாரியிடம் மன்னிப்புக் கோரினான். எண்ணை வியாபாரி வில்லாளியைப் பார்த்து நீங்கள் வில்வித்தையை தினமும் பயிற்சி செய்வதினாலேயே அதில் நிபுணராக இருக்கின்றீர்கள். நான் இவ்வாறு தினம் தினம் எண்ணை ஊற்றுவதனால் அதில் நிபுணராக இருக்கின்றேன், எல்லாமே பயிற்சியினால்தான் என்றான்.

நீங்கள் தினமும் எதனைப் பயிற்சி செய்கின்றீர்கள். கோபமடைய, குழப்பமடைய, நம்பிக்கையிழக்க, தெளிவை இழக்க அல்லது கவனத்தை இழக்க உங்களுக்கு எவ்வளவு நேரம் ஆகும்? நீங்கள் இவற்றில் எல்லாம் நிபுணர்கள். இவற்றையா நீங்கள் பயிற்சி செய்கின்றீர்கள்? சிலர் அதிக நேரத்தை எரிச்சல் உணர்வுடன் செலவழிக்கிறார்கள். குடும்பத்தாருடன் வரும் சச்சரவுகள், மேலதிகாரியின் கோபம் மற்றும் பல விடயங்களும் அவர்களை எரிச்சல்படுத்துகின்றது. இதில் பிரச்சினை என்னவென்றால் தினந்தோறும் எரிச்சல்படுவதை பயிற்சி செய்தீர்களேயானால் அதில் தேர்ந்தவராகிவிடுவீர்கள்.

உங்களைப் புரிந்து கொள்வதை பயிற்சி செய்யுங்கள், விழிப்புணர்வுடன் இருப்பதை பயிற்சி செய்யுங்கள், நன்றியுடனிருப்பதை பயிற்சி செய்யுங்கள். தன்னையுணர்வதில், புரிந்துகொள்வதில், விழிப்புணர்வுடன் இருப்பதில் மற்றும் நன்றியுடையவர்களாக இருப்பதில் நீங்கள் நிபுணர்களாகி விடுவீர்கள். உங்கள் வாழ்வில்இவ்வாறான சிறந்த விடயங்களை நீங்கள் பயிற்சி செய்தால் அது மிகவும் நன்றாக இருக்கும் அல்லவா?

# தமிழ்நாடு...

7ஆம் பக்கத்தொடர்ச்சி

சீமானின் நாதக வாக்கு வங்கி இம்முறை குறையலாம். பாஜக எதிர்ப்பு வாக்குகளும் சிறுபான்மையினர் வாக்குகளும் முழுமையாக திமுக அணிக்குக் செல்லாமல் விஜய் கட்சிக்கு வரலாம். அந்தவகையில் அதிமுக-பாஜக அணிக்கு உதவலாம் என்பதைத் தவிர விஜய்யும் வெற்றிபெற வாய்ப்பில்லை. எனவே, மீண்டும் அதிமுக அணி-திமுக அணி என்ற இருமுனைப் போட்டிக்கே தமிழ்நாடு தேர்தல் களம் தயாராகி வருகிறது எனலாம்.

இந்த சமீப அரசியல் நிகழ்வுகள் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள, அரசியல் விமர்சகர் இரா. முருகவேள், “அண்ணாமலை இல்லாவிட்டால் தமிழ்நாட்டில் பாஜக பலவீனமடையும் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இது மிகவும் அபத்தமான பேச்சு. அண்ணாமலை ஒரு ரோபோட் போல போலியாக உருவாக்கப் பட்ட பிம்பம். அண்ணாமலை இமேஜ் ஒரு குழு உருவாக்கியது. எம்ஜிஆர் மறைவுக் குப் பிறகு காங்கிரஸ் தமிழ்நாட்டு ஆட்சியை பிடிக்க முப்பனார் மூலம் ஒரு முயற்சி செய்ததுபோல ஜெயா மறைவுக்கு பிறகு பாஜக ஒரு முயற்சி செய்து பார்த்தது. ஒரு தீவிர முயற்சி, பிரதமர் பலமுறை வருகை, ஏராளமான பணம், மீடியா என்று கடுமையாக இயங்கியதால் கொஞ்சம் வளர்ச்சி தெரிகிறது. ஆனால், இதுபோன்ற முயற்சியை அதற்கான ரிசல்ட் இல்லாமல் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க முடியாது. இதனால் ஆட்சியைப் பிடிக்கும் முயற்சியை கை விடுகிறது, பாஜக அதிமுக பின்னால் போகிறது. எனவே, இனி அதற்கு அண்ணாமலை பிம்பம் அவசியமில்லை” என்கிறார்.

மூத்த பத்திரிகையாளர் சாவித்திரி கண்ணன், “அதிமுக விவகாரம் மீண்டும் ஆரம்ப சிக்கல் நிலைக்கே வந்துவிட்டது! ‘ஊருக்கு உளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி’ என்ற நிலையில் இன்றைக்கு அதிமுக உள்ளது. ஆளாளுக்கு எகிறி அடிக்கவும் வம்புக்கு இழுக்கவுமான பரிதாப நிலை! இரண்டாண்டுக்கும் மேலாக நீதிமன்றங்களில் அடுத்தடுத்து போராட்டம் நடத்தி, ‘எடப்பாடி பழனிசாமி தலைமையில்தான் அதிமுக உள்ளது’ என நிரூபிக்கப் படாதபாடுபட்டார்கள்! 95 சதவீத எம்.எல். ஏக்களும், கட்சி நிர்வாகிகளும் எடப்பாடி பழனிச்சாமி பக்கம் இருப்பது பட்டவர்த்தனமாக தெரிந்த நிலையிலும், பாஜகவின் ஆதரவாளரான ஓ.பி.எஸுக்காக அத்தனை



இழுத்தடிப்புகளை சந்தித்தனர். எல்லாவற்றையும் கடந்து, இரட்டை இலை சின்னம் கிடைத்தது. ‘அப்பாடா நிம்மதி’ என பெருமூச்சு விட்ட நிலையில், தேர்தல் கமிஷனில் புகார் தரச்செய்து மீண்டும் விசாரணை! ஓ.பன்னீர்செல்வத்தைப் பொறுத்தவரை கவுன்சிலர் தேர்தலில்கூட தான் இருக்கும் இடத்தில் தன் அணியைச் சார்ந்தவரை வெற்றி பெற வைக்க இயலாதவர். இவ்வளவு செல்லாக்காசான ஒரு நபருக்கு ஆதரவாக இந்திய நிர்வாக அமைப்பே வரிந்து கட்டிக்கொண்டு, ஒரு பெரும் கட்சியை சிதைத்து சின்னாபின்னப் படுத்தி வருகின்றன. எடப்பாடி பழனிசாமியும் பாஜகவிடம் இருந்து விலகினாலும், பாஜகவிடம் பம்மிப் பதுங்கிதான் அரசியல் செய்து வந்தார். இப்போது அதுவும் முடிந்து விட்டது. இந்த நிலையே தொடர்ந்தால் அதிமுகவிற்கு மீட்சியே இல்லை. தன்னையே காப்பாற்றிக்கொள்ள முடியாத கட்சி எப்படி தமிழக மக்களை காக்கும்?” என்கிறார்.

மூத்த பத்திரிகையாளரும் ‘ஃபிரண்ட்லைன்’ இதழின் முன்னாள் ஆசிரியருமான விஜயசங்கரும் அதிமுகவுக்கு இது பெரும் பின்னடைவுதான் என்கிறார். “அமித் ஷா பத்திரிக்கையாளர் சந்திப்பில் இருந்த உடல்மொழியைப் பார்த்தாலே ‘கூட்டணிக்குள்’ இறுக்கமும் புழுக்கமும் நிலவுகிறதென்று தெரிகிறது. முதல் கோணல்; ஜல்லிக்கட்டில் அடக்கப்பட்ட காளைகள்போல எடப்பாடியும் அண்ணாமலையும் அமித் ஷா பக்கத்தில் அமர்ந்திருந்தனர். மஹாராஷ்டிரத்தில் சிவசேனாவையும் என்சிபிஜயும் உடைத்து விழுங்கிய பாம்பு இப்போது அதிமுகவை விழுங்க தொடங்கிவிட்டது” என்கிறார் விஜயசங்கர்.

35 ஆவது ஆண்டில் கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. 1 Min. walk to TTC. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.300.9644**

**KENNEDY & LAWRENCE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.909.2773**

**WARDEN & LAWRENCE**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close to bus stop & school. Avail. June 01, 2025.
தொடர்புகளுக்கு: **416.505.4449**

**MIDDLEFIELD & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & No parking. Close to bus stop & all facilities. Working people only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.291.9078**

**SHEPPARD & ROUGE RIVER**
2 Bedrooms new spacious bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.984.6737**

**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom bsmt for rent. Laundry & parking. Family / couple / group of students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.261.3482**

**MARKHAM & DENISON**
1 Bedroom new bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. Rent $1700+Utility. Professional/Couple Preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.707.4270**

**MIDLAND & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to TTC, school, shopping center & Huntingwood Dr.. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.500.2735**

**MARKHAM & PAINTEDPOST**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. 4 male students each $500 rent including utilities. Avail. immediately.
**Contact - 647.785.9979**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & sep. laundry. Close to bus stop & all facilities. Avail. June 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.449.7440**

**MIDLANFD & FINCH**
3 Bedrooms & 2 washrooms bsmt for rent. Sep. entrance & sep. laundry. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.854.5171**

**MORNINGSIDE & FINCH**
2 Bedrooms & 2 washrooms bsmt for rent. 2 parking. 1 Master bed room available. Close to TTC &Eraa supermarket. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.781.4266**

**MARKHAM & STEELES**
3 Bedrooms bsmt for rent. Sep entrance & 1 Parking. Close to Costco, Spiceland & all facilities. Avail. immediately.
**647.767.0853/ 647.271.8511**

**POINTECLAIR & CAMARENT MONTREAL -** 1 Bedroom bsmt for rent. 1 Bedroom for rent in upstair. Couple / Single preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.427.4090**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
**647.741.5335 / 647.779.5332**

**ROSSBANK & FINCH**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.530.9724**

**COUNTRY LANE & TAUNTON WHITBY -** 1 Bedrooms brand new bsmt for rent. Sep.entrance & Sep. laundry. Avail. immediately.
**416.889.3191 /647.667.0482**

## BASEMENT FOR RENT

**BROCK & WHITE VALE**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.878.3342**

**HOOVER PARK DR. & 10TH LINE STOUFFVILLE**
1 Bedroom & 1 washrooms bsmt Apt. for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.0472**

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & No parking. Close to bus stop, subway & all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.505.4340**

**MCCOWAN & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. No smoking & no pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.761.7048**

**MARKHAM & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to TTC & Food basic. No smoking. Avail. immediately. Please leave a msg.
தொடர்புகளுக்கு: **647.295.4543**

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. No smoking & no pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.671.7768**

**ST. CLAIR & BIRCHMOUNT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Close to all facilities. Avail. immediately.
**437.663.2590 / 416.268.8855**

**WESTNEY & ROSSLAND**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.258.7156**

## BASEMENT FOR RENT

**MIDLAND & EGLINTON**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
**647.278.5911/647.282.5902**

**MORNINGSIDE & STAINES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & laundry. Close to TTC & shopping center. Family preferred. No pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.278.9511**

**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.666.2205**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom 1st floor for rent. All are separate. 1 Parking. walking distance to bus stop & all facilities. Avail. June 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.855.0339**

**TAUNTON & SALEM - AJAX**
1 Bedroom bsmt for rent. Sep. entrance , laundry & parking. Close to bus stop. Female/ couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.395.5914**

**WARDEN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to bus stop, Costco & all facilties. Avail. immediately.
**416.757.8278 /437.260.3014**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Close to bus stop & School. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.855.6482**

**9TH LINE & 14TH AVENUE**
2 Bedrooms new bsmt for rent. Sep. entrance, parking, open kitchen living space & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.920.5745**

## BASEMENT FOR RENT

**BELLAMY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to TTC & Go Train. Avail. May 01, 2025.
**647.766.1913/416.267.7178**

## ROOM FOR RENT

**MIDDLEFEILD & FINCH**
1 Space (Den) for rent. Parking & laundry. Close to bus stop & shopping mall & all facilities. Female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.278.4911**

**BRIMLEY & EGLINTON**
Room & Bachelor room with wash room & kitchen for rent. Close to all facilities. Avail. immediately.
**416.294.0193/ 416.892.7762**

**BROCK & KINGSTON PICKERING -** 2 Bedrooms for rent in a 3 bedrooms bsmt. Sep. entrance. Close to HWY 401 & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.301.9475**

**MCCOWAN & HIGHGLEN**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Male only. Sep. entrance & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.822.5949**

**KENNEDY & ELLESMERE**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Sep. entrance & parking. Female only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.764.8241**

**MCCOWAN & FINCH**
1 Bedroom for rent in main floor. 1 parking. Female/ Seniors Preferred. Close to bus stop & all facilities. Avail. immediately.
**416.474.4935/647.323.4956**

**MORNINGSIDE & FINCH**
2 Bedrooms for rent in a 3 bed rooms bsmt. Sep. entrance & Parking. Family /Male only. 3 Min. walk to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.275.7764**

**MARKHAM & MCLEVIN**
One room for rent in main floor. Sep. washroom. Steps to TTC. Female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.899.6300**

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom for rent in a 3 bedrooms bsmt. Close to bus stop (133, 39, 116, 53) & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.262.6616**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**
2 Rooms for rent in upstairs with attached washroom. Close to School, bus stop, Eraa super market. Avail.immediately.
**416.662.1418/289.244.8555**

**MARKHAM & DENISON**
Room for rent in a bsmt. No parking, Sep. entrance & sep. laundry. Male only. Close to all facilities. Rent $850. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.826.8811**

**SCAR.GOLF CLUB &ELLESMERE**
1 Bedroom for rent in a 3 bed rooms bsmt. Sep. entrance & internet. Working female preferred. Avail. immediately.
